Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா: 7.00

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | கார்த்திகை 09 | புதன்கிழமை | (24.11.2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 341

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் சிமெந்து
முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

## தென்னிலங்கை அரசியல் களம் சமாதானத்தை விரைவுபடுத்த வலியுறுத்தி

# தலைவர் பிரபாவின் மாவீரர்நாள் உரையில் அரசுக்கு காலக்கெடு?

## அரசியல் அவதானிகள் எதிர்வுகூறல்

(கொழும்பு)

**தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் தனது மாவீரர் நாள் வருடாந்த உரையில், சமாதான முயற்சிகளை விரைவுபடுத்தவும், முடிவொன்றை உறுதிப்படுத்தவும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசுக்கு காலக்கெடு ஒன்றை விதிப்பார் என்று அரசியல் அவதானிகள் எதிர்வு கூறியுள்ளனர்.**

இலங்கையர் உட்பட சர்வதேச சமூகமே ஆவலுடன் எதிர்பார்க்கும் வருடாந்த மாவீரர் நாள் உரையினை எதிர்வரும் 27 ஆம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் ஆற்றவுள்ளார்.

வருடா வருடம் அவர் ஆற்றுகின்ற சிறப்புரையாகவும் புலிகள் அமைப்பின் தெட்டத்

(12 ஆம் பக்கம் பார்க்க)




கனடா ஒட்டாவா வாழ் தமிழ் சமூகத்தினால் தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரனின் 50 ஆவது பிறந்ததினத்தை முன்னிட்டு சிறப்பாக வடிவமைக்கப்பட்ட வாழ்த்து அட்டை ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அவ் வாழ்த்து அட்டையை படத்தில் காண்கிறீர்கள்.

## தலைநகரில் தமிழர் மீது கெடுபிடி

# தமிழ் இளைஞர்கள் மூவர் நேற்று கொழும்பில் கைது!

(கொழும்பு)

பாராளுமன்றத்திற்குச் செல்லும் பாதையில் வெலிக்கடைச் சந்திக்கு அண்மையில் வைத்து மூன்று தமிழ் இளைஞர்கள் உட்பட நான்கு பேர் பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடியதாலேயே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இலங்கையில் சட்ட ரீதியாகப் பயன்படுத்தப்படாத நவீனரக துப்பாக்கிகள் இரண்டு அவர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்டுள்ளதாக மேல் மாகாண தென்பகுதிக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் கே.ஜி.பி. பத்திரன தெரிவித்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

**உள்ளே விதுரனின்...**

**ஆன்மீகத்துடன் விளையாடும் தமிழக அரசியல் சிறப்புக் கட்டுரை...**



# அரச மரத்தில் விநாயக பெருமானின் உருவம்

## தொண்டமனாறு செல்வச் சந்நிதியில் அற்புதம்

(யாழ்ப்பாணம்)

தொண்டமனாறு செல்வச் சந்நிதி கோயில் வீதியிலுள்ள அரச மரத்தில் விநாயகப் பெருமானின் தும்பிக்கையுடனான முகம்போன்ற அமைப்பு தோன்றியுள்ளது.

இவ்வுருவம் கடந்த மூன்று மாதங்களிற்கு முன்பிருந்தே தோன்றி

(12 ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவ வாகனம் மீது நேற்று பொலநறுவையில் தாக்குதல்

## சந்தேகத்தில் இரு தமிழர் கைது

(மட்டக்களப்பு)

பொலநறுவை மாவட்டம் மன்னம்பிட்டியில் இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் பயணம் செய்த வாகனம் மீது நேற்று மாலை இனம்தெரியாதோரினால் தாக்குதல் நடாத்தப்பட்டது.

அதில் பயணம் செய்த இரண்டு புலனாய்வுத் துறையினரும் எவ்வித காயங்களும் இன்றி தப்பிக்கொண்டதாக பொலிஸார் தெரி

(12 ஆம் பக்கம் பார்க்க)

# அரச ஊழியரின் 8 மணித்தியால வேலை நேரத்தில் மாற்றமில்லை!

## நிதியமைச்சர் சரத் அமுனுகம

(கொழும்பு)

அரச ஊழியர்களின் எட்டு மணித்தியால வேலை நேரத்தை அதிகரிப்பதில்லை என்று நிதியமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சியின் பிரதான அமைப்பாளர் மஹிந்த சமரசிங்க எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அரசாங்க ஊழியர்களின் வேலை நேரத்தை எட்டு மணித்தியாலத்தில் இருந்து அதிகரிக்க எந்தவித சட்டங்களும் கொண்டு வரப்படமாட்டாது என நிதியமைச்சர் அப்போது உறுதியளித்தார்.

வேலைநேரம் 9 மணித்தியாலங்கள் என தொழிற்சங்கங்கள் பலவற்றினதும், அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் பல கட்சிகளினதும் விருப்பத்திற்கு அமையவே யோசனை முன்வைக்கப்பட்டது.

எனினும் ஒருமணி நேரம் வேலையில் கூடுதலாக ஈடுபடுமாறு எந்தவித அழுத்தங்களும் எவர் மீதும் பிரயோகிக்கப் படமாட்டாது.

வரவு - செலவுத் திட்டத்தில் உள்ள சில யோசனைகளை நடைமுறைப்படுத்துவதற்கு புதிய சட்டங்கள் இயற்படும் என்றும் நிதியமைச்சர் மேலும் தெரிவித்தார்.(இ-4)

# ஜனாதிபதி சந்திரிகா நேற்று ஈரான் பயணம்

(கொழும்பு)

இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்று ஈரானுக்கு பயணமானார்.

ஈரான் ஜனாதிபதி முகமட் கட்டாமியின் அழைப்பின் பேரிலேயே ஜனாதிபதி அங்கு பயணம் மேற்கொண்டுள்ளார்.

ஜனாதிபதியுடன் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், எரிசக்தி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த ஆகியோரும் அங்கு சென்றுள்ளனர்.

இவ்விஜயத்தின் போது ஈரானுக்கும் இலங்கைக்குமிடையிலான அன்னியோன்னிய

(12 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## இன்று ஒரு தகவல்

# நினைவாற்றல்

கடன் கொடுத்துவிட்டு அதை மறக்காமல் நினைத்துக்கொண்டிருப்பது சகஜம். கடன் வாங்கிவிட்டு அதை அப்படியே மறந்து விடுவதும் இந்த உலகத்தில் சகஜம். போன மாதம் பத்து ரூபா கொடுத்தேனே அதை வாங்கிப் போக வந்தேன் என்பான் ஒருவன். வந்தவனைப் பார்த்து 'நீ யார்?' என்று கேட்பான் இவன். வந்தவனையே ஞாபகம் இல்லாத போது வாங்கிய கடனா ஞாபகம் இருக்கும்? தனக்கு வேண்டாதது மனதிற்குக் கசப்பானது போன்றவற்றை மனிதன் மறந்து விடுவானாம்.

உளவியல் அறிஞர்கள் நினைவாற்றலை இரண்டு விதமாகப் பிரிக்கின்றார்கள். குறுகியகால நினைவு, நீண்டகால நினைவு நாம் நினைவில் வைத்துக் கொள்ளவேண்டியதன் அவசியத்தைப் பொறுத்தும், நோக்கத்தைப் பொறுத்தும் அதைப் பிரிக்கின்றார்கள். இன்று பத்திரிகையில் நமது ராசிபலன் என்னவென்று பார்க்கிறோம். இதை நாம் வாழ்நாள் முழுதும் நினை வில் வைத்துக்கொள்ளவேண்டுமென்று அவசிய மில்லை.

ஒரு திருக்குறள் படிக்கிறோம். அது எப்போதும் நமது நினைவில் இருக்க வேண்டும். பாடம் படிக்கும் போது ஞாபகசக்தி மிகவும் அவசியம். நினைவாற்றல் என்பது நாம் கற்கக்கூடிய நன்மையைப் பொறுத்தது என்பார்கள். இதை வளர்த்துக் கொள்ளச் சில வழி முறைகள் உள்ளன.

முதலில படிப்பதற்கான ஆர்வம் வேண்டும். படிப்பதை, கேட்பதை, நன்கு மனதில் பதிக்க வேண்டு மென்ற ஆர்வம் வேண்டும். கவனத்தை வேறுவகை யில் சிதறவிடக் கூடாது. படிக்கும் பாடத்தை மனதிற்குள் பாடமாக்கி பார்க்கவேண்டும். அதற்குக கற்பனையைப் பயன்படுத்த வேண்டும். அதனால்தான் படத்துடன் பாடங்களைத் தருகின்றனர்.

படிக்கும் விடயத்தையும் மற்றவகைச் செய்திகளுடன் தொடர்புபடுத்திப் படிக்கவேண்டும். நயத்தோடு பயிலவேண்டும். இசையுடன் பயில வேண்டும். நீண்ட நாள் நினைவில் வைத்திருக்க இது நல்ல வழி. நாம் என்ன படிக்கின்றோமோ அதைப் பிரித்துப் பொருள் தெரிந்து படிக்கவேண்டும். படித்ததை மனக்கண் முன் கொண்டு வரவேண்டும். படித்தபின் புத்தகத்தை மூடிவைத்துவிட்டு மீண்டும் சொல்லிப் பார்க்க வேண்டும். படித்த பின்பு ஓய்வு அல்லது உறக்கம் மிக நல்லது. படித்த பின்னர்தான் உறக்கம் வரவேண்டும். படிக்கும் போதே உறக்கம் வருவது நல்லதற்கல்ல. படித்த பின்பு கடினமான வேலையில் ஈடுபடுவது நல்லதல்ல.

ஒரு புத்தகத்தை அல்லது பாடத்தைப் படிப்பதற்கு முன் அதன் உட்பொருளை அல்லது கருத்தைத் தெரிந்து கொண்டு படிப்பது நல்லது. பொதுவாக திரும்பத் திரும்பப் படிப்பது ஞாபகசக்தியை வளர்த் தெடுப்பதற்குச் சிறந்த வழி. அதனால் நினைவாற்றலை வளர்த்துக் கொள்வதற்கு தேவை ஆர்வம், ஊக்கம், மனஉறுதி படிக்கின்ற காலத்திலேயே இந்தப் பழக்கம் வந்துவிட்டால் பின்பு மிக உதவியாக இருக்கும். இன்றைய இளைஞர்கள் தான் நாளைய தலைவர்கள். தலைவர்களாகி விட்டால் நிறையப்புள்ளி விபரங்களைக் கூறவேண்டியிருக்கும். ஞாபகசக்தி இல்லா விட்டால் எப்படிச் சொல்வது?

ஜெனரல்ஸ் மட்ஸ் என்று ஒருவர் தென்னாபிரிக்காவில் பிரதமராக இருந்தார். பாராளுமன்றில் பேசுவதற்கு அவருக்கு முக்கியமான புள்ளிவிபரம் தேவைப் பட்டது. மறுநாள் அதைப் பற்றிப் பேசவேண்டும். செயலாளரை அழைத்தார்." இதோ பாருங்கள்! நாளைக்கு இந்தப் புள்ளிவிபரங்கள் தேவை என்றார். செயலாளர் திகைத்துப்போய்விட்டார். "சார்! இந்தப் புள்ளிவிபரங்களைச் சேகரிக்க எனக்கு 5 வருடம் ஆகும்" என்றார்.

மறுநாள் பாராளுமன்றம் கூடியது. புள்ளிவிபரங்களை அள்ளி வீசி எல்லோரையும் ஆச்சரியப்பட வைத்துவிட்டார் ஸ்மட்ஸ். பேச்சு முடிந்ததும் செயலாளர் ஓடி வந்தார். "எப்படி சார் இது? இவ்வளவு புள்ளி விபரங்களை ஒரே இரவில் எப்படிச் சேகரித்தீர்கள்? ஆச்சரியமாக இருக்கிறதே" என்றார். "இந்த விபரங்களைச சேகரிக்க அரசாங்கத்திற்கே ஐந்து வருடம் ஆகும் என்றீர்கள். அப்படியென்றால் இவை யாவும் உண்மைதானா என்று கண்டுபிடிக்க எதிர்க்கட்சிகளுக்கு பதினைந்து வருடமாகும் அவர்கள் கண்டுபிடித்து என்னை மடக்குவதற்குள் நான் பதவி விலகிவிடுவேன்! அது தான் அடித்துவிட்டேன்" என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# யாழ்ப்பாணத்தை மீட்பதற்கு புலிகள் நடத்திய சமரை முறியடிக்க அரசுக்கு பாகிஸ்தானும் உதவியது

## எனகிறார் பாக் .பிரதமர் சௌகத் அஸீஸ்

(கொழும்பு)

**யாழ்ப்பாணத்தை மீட்க தமிழீழ விடுதலைப்புலிகள் மேற்கொண்ட மீட்புச்சமரை முறியடிப்பதற்கு பாகிஸ்தான் ,இலங்கை இராணுவத்திற்கு பெருமளவு இராணுவத் தளபாடங்களை வழங்கி உதவியதாக பாகிஸ்தான் பர்தமர் சௌகத் அஸீஸ் தெரிவித்துள்ளார்.**

கடந்த ஞாயிற்றுக்கிழமை இலங்கைக்கு உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு கொழும்பை வந்தடைந்த பாகிஸ்தான் பிரதமர் நேற்று முன்தினம் ஊடகவியலாளர்கள் மத்தியில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

பாகிஸ்தானுக்கும் இலங்கைக்கும் இடையிலான இராணுவ ரீதியிலான ஒத்துழைப்பு மிகச் சிறப்பானதாக உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் மேற்கொள்ளப்படவுள்ள பாதுகாப்பு ஒப்பந்தம் குறித்து ஊடகவியலாளர் பாகிஸ்தான் பிரதமரிடம் கருத்துக் கேட்ட போது எது நல்லது? எது கெட்டது என்பதனை ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவுள்ள இரு நாடுகளுமே தீர்மானிக்க வேண்டும் எனக் கூறியதுடன் இது குறித்து தான் மேலதிகமாக எதையும் கூறவிரும்பவில்லை எனத்தெரிவித்தார்.

இதேவேளை, பாகிஸ்தானும் இலங்கையும சுதந்திர வாத்தக ஒப்பந்தம் ஒன்றை செய்து கொள்ளவுள்ளதாகவும் பாகிஸ்தான் பிரதமர் தெரிவித்தார்.

எதிர்வரும் ஜனவரி மாதமளவில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பாகிஸ்தானுக்கு விஜயம் செய்யவுள்ளபோது இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படும் என்றும் பாகிஸ்தான் பிரதமர் மேலும் தெரிவித்தார்.

பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஷ்முஷாரப், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை பாகிஸ்தானுக்கு வருகை தருமாறு பிரதமர் அஸீஸ் ஊடாக அழைப்பு விடுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (க)

# வெளிநாட்டு முதலீடுகளை கவருவதே தமது நோக்கம் என்கிறார் பாக்.பிரதமர்

(கொழும்பு)

சார்க் அமைப்பு நாடுகள் எதிர்நோக்கும் சவால்களை எதிர்கொண்டு வெளிநாட்டு முதலீடுகளைக் கவருவதே எமது நோகக்ம் என்று பாகிஸ்தான் பிரதமர் சௌகத் அஸீஸ் கூறியுள்ளார்.

கொழுமபில் நேற்று முன்தினம் நடைபெற்ற பேச்சுவார்த்தையொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

சார்க் நாடுகளின் ஒத்துழைப்பை வளப்படுத்துதல், தனியார் துறையினரின் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்குதல் போன்ற விடயங்களில் சார்க் அமைப்பு நாடுகள் உரிய கவனம் செலுத்துகின்றன.

சார்கக் வலய நாடுகள் நேரடி வெளிநாட்டு முதலீடுகள் மூலம் அதிகளவு பெறுபேறுகளைப் பெறுவதற்கு முயற்சிக்கவில்லை. பொதுவாக சார்க் வலய நாடுகளுகக்கு வருடாந்தம் 6 கோடி மில்லியன் டொலர் நிதி வெளிநாட்டு முதலீடுகள் மூலம் கிடைக்கின்றன. சீனாவுக்கு வருடாந்தம் 50 மில்லியன் டொலர் நிதியுதவி கிடைக்கின்றது என்றும் அவர் கூறினார்.

பாகிஸ்தான் பிரதமர் இலங்கையில் தங்கியிருந்த காலப்பகுதியில் ஜனாதிபதி, பிரதமர் உட்பட பலரையும் சந்தித்துக் கலந்துரையாடினார். அவர் நேற்று முன்தினம் நண்பகலளவில் நாடு திரும்பினார்.(ந-8)

# இராசி பலன்

**24.11.2004**
**(கார்த்திகை 09 புதன்கிழமை)**
**திரயோதசி முன்னிரவு 11.39 மணிவரை**
**அச்சுவினி முன்னிரவு 9.13 மணிவரை**
**இராகுகாலம் 12.12- 1.42 மணிவரை**
**சுபநேரம் 4.42- 6.12 மணிவரை**
பிரதோசவிரதம்

**மேடம்** ஜனவசியம், காரிய அனுகூலம், போசனநன்மை, பெரியோர் சந்திப்பு.

**இடபம்** காரிய அலைச்சல், பணவிரயம், சயனசுகக்குறைவு, உறவினர் சந்திப்பு.

**மிதுனம்** கீர்த்தி, எடுத்தகருமங்கள் கைகூடும், பொருள் சேர்க்கை, குடும்ப மகிழ்ச்சி

**கடகம்** தூரதேசச் செய்தி, எடுத்த கருமங்கள் கைகூடும், நல்ல சம்பவம், நண்பர்கள் சந்திப்பு.

**சிங்கம்** கட்டுப்பாடு, புதியதிட்டமிடல், பிதாசிந்தை, பிரயாணம்.

**கன்னி** பிரயாண பயம், உறவினர் வெறுப்பு, காரிய தாமதம், பணவிரயம்.

**துலாம்** நல்லவவேற்பு, பிரயாணம், களஸ்திர நன்மை, வெய்வ சிந்தை.

**விருச்சிகம்** உடல் நலம், பகைவரால் நன்மை, எடுத்தகாரியம் கைகூடும், போசனசுகம்.

**தனுசு** வியாபார விருத்தி, குடும்பக் கவலை, தாழ்ந்தசுபாவம், தனவிரயம்,

**மகரம்** புதிய விடயம், கல்வியில் ஆர்வம், முயற்சி தாமதம், தாய்வழி உறவு.

**கும்பம்** நல்லமுயற்சி, தனலாபம், கீர்த்தி, தொழில் நன்மை.

**மீனம்** விவாதம், முயற்சி தாமதம், பணவிரயம், வேலைச் சுமை.

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது
- வளவன்

'யானைக்கால் நோய்க்கு வெளிப்பூச்சு மருந்து'

# மரண தண்டனை அமுல் குறித்து புதிய இடதுசாரி முன்னணி கருத்து

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தினால் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுள்ள மரண தண்டனையினால் நாட்டில் குற்றச்செயல்களைத் தடுக்க முடியாது என புதிய இடதுசாரி முன்னணி சுட்டிக்காட்டியுள்ளது.

இது விடயம் குறித்து ஊடகங்களுக்கு விடுக்கப்பட்டுள்ள அறிக்கையில்,

உயர்நீதிமன்ற நீதவான் சரத் அம்பேபிட்டிய படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து அரசாங்கததினால் மரணதண்டனை அமுலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

இது யானைக்கால் நோய்க்கு வெளிப்பூச்சு மருந்து பூசுவது போலாகும். முழு சமூகத்தையும் யுத்த மனோ நிலைக்கு இழுத்துவிட்டு தினசரி தீவிரமாகும் சமூகப் பிரசசினைக் குற்றங்கள் குறித்து முன்னர் நாம் எடுத்துக் காட்டியுள்ளோம்.

இத்தகைய குற்றங்களைக் களைவதற்கு அதற்கான அடிப்படைக் காரணங்களை நீக்கி சட்டத்தை செயலபடுத்துவதற்கு பொலிஸைச் சரியாகப் பயன்படுத்த. வேண்டும். நடந்துள்ள கொலை பற்றிய தகவலுக்கமைய பொலிஸ் தனது கடமையை சரிவர நிறைவேற்றவில்லை எனத் தெரிகிறது. இதற்கான பொறுப்பை பாதுகாப்பு அமைச்சரும் துணையமைசசரும் ஏற்க வேண்டும். மக்களுக்குப் பாதுகாப்பளிக்க முடியாத இந்த அரசு அனைத்து குரூர கொலைக்குமான பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும். அதை விடுத்து அரசு கொலைக் குற்றங்களைத் தடுககும நடவடிக்கையை எடுக்க முடியாது எனக் குறிப்பிடபபட்டுள்ளது. (ற)

# தொலைபேசி அழைப்புக்களை வைத்து சூத்திரதாரியை கண்டு பிடிக்க முயற்சி

(கொழும்பு)

கொழும்பு மேல் நீதிமன்ற நீதியரசர் சரத் அம்பேபிட்டியவை கொலை செய்த நபர்கள் பயன்படுத்தியதாக நம்பப்படும் கைத்தொலைபேசிகளுக்கு உள்வந்த வெளிச் சென்ற தொலைபேசி அழைப்புகள் தொடர்பான விபரங்களைச் சமர்ப்பிக்குமாறு கொழுமபு பிரதம நீதபதி சரோஜினி குசலா வீரவர்த்தன டயலொக் ஜீ எஸ். எம். தொலைத் தொடர் நிறுவனத்திற்கு உத்தரவிட்டுள்ளார்.

செபரம்பர் முதலாம் திகதி தொடக்கம் நவம்பர் 15ஆம் திகதி வரையான அழைப்புக்களின் விபரங்களுடன் குறிப்பிட்ட கைத்தொலைபேசியின் உரிமையாளரின் பெயர் முகவரி போன்ற விபரங்களையும் சமர்ப்பிக்குமாறு அந்நிறுவனத்திடம் கேட்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளியன்று கொலை நடைபெற்றதைத் தொடர்ந்து காணாமல் போய்விட்ட பொலிஸ் ரோந்துப பதிவுப் புத்தகத்துடன் தொடர்புபட்டவர்கள எவராயினும் அவர்களுக்கெதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது. (ந-6)

# மாவீரர்களது புனிதமிகு தியாகங்களால்தான் விடுதலைப் புலிகள் அமைப்பு நிமிர்ந்து நிற்கிறது

## யாழ்.மாவட்ட அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் செம்மணன் உரை

(புங்குடுதீவு)

தமிழ் மக்கள் வாழ்வில் புதிய மாற்றங்கள், புதிய திருப்புமுனைகளினை தங்களுடைய அற்புத



தியாகத்தினால் நிலைநாட்டிய மாவீரர்களை எமது தமிழினம் இருக்கும்வரை போற்றி கௌரவிக்கப்பட வேண்டியவர்கள் என புங்குடுதீவு தேசிய எழுச்சிப் பேரவையினால் நடாத்தப்பட்ட மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய தமிழீழ விடுதலைப்புலிகளின் யாழ்மாவட்ட அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் செம்மணன தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், எங்கள் இனம் சிங்கள இனத்தினால் அழிக்கப்பட்ட வேளை, மக்கள் நிம்மதியாகவும், சகல உரிமைகளுடனும் வாழவேண்டும் என்பதற்காக தங்களது உயிர்களைக்கூட துச்சமென மதித்து களங்கள் பல கண்டு வீரகாவியமானவர்கள் மாவீரர்கள.

இதனைவிட எமது விடுதலைப் போராட்ட வரலாற்றிலே பாரிய மாற்றத்தை உருவாக்கிய பெருமை இம் மாவீரர்களையே சாரும்.

தமிழர்கள் என்றும் அடிபணியாதவர்கள் என்பதனை உலகுக்கு எடுத்துக்காட்டியவர்கள. இவர்களுடைய புனிதத்தினால் எமது விடுதலை அமைப்பு நிலைத்து இருக்கின்றது.

சிங்கள அரசாங்கம் எமது உரிமைகளைத் தருகின்ற நிலையில் இல்லை. எனவே எங்களுடைய உரிமைகளை நாமே பெற்றுக் கொள்ள வேண்டும்.

இம் மாவீரர்களது இலட்சியத்தாலும், அவர்களுடைய தியாகத்தினாலும் எமது விடுதலையினை வென்றெடுப்போம்.

தமிழா என்ற இனம் வாழுகின்ற உலகின் எல்லா நாடுகளிலும் இம் மாவீரர் நாள் கொண்டாடப்பட்டு வருகின்றது.

இந்நாளிலே ஒருமித்து நின்று தலைவருடைய கரத்தினைப் பலப்படுத்த வேண்டும் என்றார்.

இந்நிகழ்வானது புங்குடுதீவு பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையினால் புங்குடுதீவு ஸ்ரீசுப்பிரமணியம் மகளிர் வித்தியாலயத்தில் தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் பி.வினாயகமூர்த்தி தலைமையில் இடம்பெற்றது.

இதில் தமிழீழத் தேசயக் கொடியினை யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் மாதுளன் ஏற்றினார். பொதுச் சுடரினை யாழ் மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளரும் ஈகச்சுடரினை யாழ் மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் ஊடகப் பேச்சாளர் விகனகலிஙக மும், மாவீரர்களது பெற்றோர்களும், ஏற்றினர்.

மாவீரர்களின் திருவுருவப்படத்துக்கான மலர் மாலைகளினை யாழ்மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் செம்மணன், தீவகக் கோட்ட சிறப்பு பொறுப்பாளர் கண்ணன், தீலிபன் மருத்துவமனை வைத்திய அதிகாரி வண்ணன் ஆகியோர் அணிவித்தனர்.

நினைவுரைகளினை புங்குடுதீவு சுப்பிரமணிய மகளிர் வித்தியாலய அதிபர், யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப பேரவையின் ஊடகப் பேச்சாளர், யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறை பொறுப்பாளர் மாதுளன் உட்பட பலர் நிகழ்த்தினர்.

புங்குடுதீவு பிரதேச பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் பேரவை உறுப்பினர்கள், அரச மற்றும் கூட்டுறவு பொது நிறுவன பிரதிநிதிகள் என பலரும் கலந்துகொண்டனர். (ப-126)


## சிறு விளம்பரம்

G.C.E.O/L மாணவர்கட்கான English Literature, English Language பாடங்களுக்கான எதிர்பார்க்கை வினாக்களுடன் கூடிய முழுப்பாடத் திட்ட மீட்டல் கருத்தரங்குகள் இம் மாதம் 25ஆம், 26ஆம் திகதிகளில நடைபெறும். பதிவுகள் 25ஆம் திகதி காலை 7 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும். தொடர்பு கோ.சுப்பிரமணியம் இல.62 பழம் றோட், கநதர்மடம் யாழ்ப்பாணம். (9038)


## கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை டிப்போ ஊழியர் சங்கத்தால் அங்கு கடமையாற்றும் மாவீரர்களின் பெற்றோர்கள் நேற்றுமுன்தினம் கௌரவிக்கப்பட்டனர்.

போக்குவரத்து ஊழியர் சங்கத் தலைவர் புவனேசுவரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், மாவரர்களின் பெற்றோர்களை கௌரவிக்கும் வகையில் கருத்துரைகளும் இடம்பெற்றன.

இதில் யாழ்.மாவட்ட தொழிற் சங்கப் பொறுப்பாளர் இம்மயவன், தூயவன் அரசறிவியல் கல்லூரி அதிபர் அரசண்ணா ஆகியோர் சிறப்புரைகளை நிகழ்த்தினர்.(ச)

# 2.4 மில்லியன் அமெ.டொலர் நிதிசெலவில் 3 வருடகால வியாபார அபிவிருத்தித்திட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் சிறிய மற்றும் நடுத்தர வியாபார முயற்சிகளை ஊக்குவிக்கும் நோக்குடன, வியாபார சேவைகள், உதவிகள், வசதிகள் வழங்கும் நிறுவனத்தின் (**Business Services Support Facility**) உயர் அதிகாரி மார்க் வான் ஸ்ரின்க் நேற்றுமுன்தினம்



யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்தார்.

அவர் யாழ்.வணிகர் கழகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின்போது தனது கருத்துக்களைத தெரிவித்தார். யாழ்ப்பாணம் கோவில் வீதியில் இயங்கும் வடமாகாண வியாபார அபிவிருத்தி நிலையத்தின் செயற்பாடுகள் மற்றும் யாழ்ப்பாணத்தில் இயங்குகின்ற சிறிய உற்பத்திக் கைத்தொழில் வியாபார முயற்சிகள் போன்றவற்றை ஆராயவும், இபபடியான செயற்பாடுகளில ஆர்வம் உடையவர்களைச் சந்தித்து ஆலோசனை வழங்குவதற்காகவுமே அவர் இங்கு வந்திருந்தார்.

அவர் பத்திரிகையாளர் சந்திப்பில் கருத்து வெளியிடுகையில் வியாபார அபிவிருத்தி நிலையங்கள் இலங்கையில் திருகோணமலை, குருநாகல், கண்டி, கொழும்பு மற்றும் மாத்தறை ஆகிய நகரங்களில் இயங்குகின்றன. இவ்வலையமைப்பினை ஒன்றிணைந்து நடத்துபவர்களும், உரிமையாளர்களுமாக மூன்று தனியார் அபிவிருத்தி நிறுவனங்கள் செயறபடுகின்றன.

இலங்கை வியாபார அபிவிருத்தி நிலையம், கைத்தொழில் சேவைகள் பணியகம், சர்வோதய பொருளாதார வியாபார அபிவிருத்தி சேவைகள் நிறுவனம் ஆகியவற்றுக்கு வியாபார சேவைகள் உதவி வழங்கும் நிறுவனம் நிதியுதவிகளை வழங்கிவருகின்றது.

இலங்கை அரசாங்கத்தினதும் ஆசிய அபிவிருத்தி வங்கியினதும் இணைந்த செயற்றிட்டத்தின் மூலமே இவ் அமைப்பு தொழிற்பட்டுவருகிறது.

வியாபார அபிவிருத்தி நிலைய வலையமைப்பு நேரடியாகவும், வழங்குனர் வலையமைப்பினூடாகவும் வியாபாரம தொடர்பான பரந்துபட்ட சேவைகளை வழங்கிவருகிறது.

சிறிய நடுத்தர வியாபார முயற்சிகளை ஊக்குவிக்கும் நோக்குடன் இலங்கை அரசாங்கம் தன்னை ஓர் ஆலோசகராகவும் நியமித்திருக்கின்றது. அந்தவகையில், தான் புதிய தொழில்நுட்பம், நிதித்திட்டமிடல், வியாபார வினைத்திறன், ஆய்வுகள், நிதித்திட்டப் பகுப்பாய்வு, கடன் வழங்குதல் சம்பந்தமான முன்மொழிவு, மூலதன வளங்களைக் கண்டறிதல், குடிசார் இயந்திரவியல், உற்பத்தி இயந்திரவியல், கட்ட நிர்மாணம், சந்தைப்படுத்தல், சந்தை அபிவிருத்தி மற்றும் சர்வதேச சந்தைப்படுத்தல் குறித்த ஆலோசனை வழங்கல், போன்ற சேவைகளை எமது நிறுவனம் வழங்கிவருகிறது.

அதன் அடிப்படையில், அடுத்து வரும மூன்று வருடங்களில் 2.4மில்லியன் அமெரிக்க டொலர் நிதி இநநிகழ்ச்சித் திட்டத்திற்காகச் செலவிடப்படவுள்ளது எனத் தெரிவித்தார். (ற-5)

# புத்தளம்-கொழும்பு வீதியில் குண்டு கண்டுபிடிப்பு

(புத்தளம்)

புத்தளம்-கொழும்பு வீதியில் நேற்று முன்தினம் மாலை அநாதரவாகக் கைவிடப்பட்ட குண்டு ஒன்று கண்டெடுக்கப்பட்டு, இராணுவக் குண்டு செயலிழககும் பிரிவினால் செயலிழக்கச செய்யப்பட்டுளளது.

குண்டு அந்த இடத்திற்கு எவ்வாறு கொண்டுவரப்பட்டது என்பது மர்மமாக இருப்பதாக பொலிஸார் கூறினர்.

இது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-8)

# நூல் வெளியீட்டு விழாவும் பண்ணிசை அரங்கு நிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

சபரகமுவ பல்கலைக்கழக மொழித்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் சித்தாந்த பண்டிதர் வாகீச கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரனின் இரு ஆய்வு நூல்கள் வெளியீட்டு விழாவும் திருமுறைப் பண்ணிசை அரங்கும் எதிர்வரும் 28ஆம் திகதியும், எதிர்வரும் ஜனவரி மாதம் 16ஆம் திகதியும் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

திருமுறைப் பண்ணிசை அரங்கும், 'அறுபத்து நான்கு கலைகளும் கலையாக்கத்திறன்களும்' எனும் ஆய்வுநூல் வெளியீடும் எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப.4.00மணிக்கு வடக்கு-கிழக்கு மாகாணக் காணி விவசாய அமைச்சின் செயலாளர் ப.க.பரமலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளன.

'வட இலங்கையின் அறுபத்து நான்கு சக்திபீடம் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன்' வரலாறும் தலப் பெருமையும் என்ற ஆய்வு நூல் வெளியீடு எதிர்வரும் ஜனவரிமாதம் 16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00மணிக்கு இடம்பெறவுள்ளது. (ற)

# நீதிபதிகளுக்கான பாதுகாப்பு ஏற்பாடு குறித்து கட்சித் தலைவர்களுடன் ஆராயப்படவுள்ளது

(கொழும்பு)

நாட்டில் நீதிபதிகளுக்கும், நீதிமன்ற அதிகாரிகளுக்கும் விடுக்கப்பட்டுள்ள அசசுறுத்தல் குறித்து ஆராய்வதற்காக உடனடியாக கட்சித் தலைவாகளின் கூட்டத்தைக் கூட்டுவதற்கு கட்சித் தலைவர்களுக்கு அழைப்பு விடுக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக் கிரமசிங்க சபநாயகரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

விஷேடமாக மேல்நீதிமன்ற நீதிபதிகளும், அதிகாரிகளும் பாதாள உலகக்கோஷ்டிகளுடன் தொடர்புடைய வழங்குகளை விசாரணை செய்வதினால இவர்களுக்கு விடுகப்பட்ட மரண அச்சுறுத்தல் ஒட்டுமொத்த நீதிமன்ற நடவடிக்கைகளையும் தளர்வடையச் செய்வதற்கான சந்தர்ப்பத்தையே ஏற்படுத்தியிருக்கின்றன.

இந்த விடயங்கள் குறித்து ஆராய்ந்து இதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பாகக் கட்சித்தலைவர்களின் கூட்டத்தில் தீர்மானம் மேற்கொள்ளப்பட வேண்டும்.

நீதிமன்ற நடவடிக்கைகள் தொடர்பாக அதிகாரம் பாராளுமன்றத்துக்கு இருப்பதினால் நீதிமன்றங்களில் பணிபுரியும் அதிகாரிகளின் பாதுகாப்பும் பாராளுமன்றத்துக்கே உள்ளது எனவும் ரணில் விக்கிரமசிங்க மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (ற-8)

## திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

வடககு-கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித்திட்ட (நிக்கொட்) நிதியுதவியுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஊடாக நிர்மாணிக்கப்பட்ட அரியாலை மத்திய தெற்கு கிராம புனர்வாழ்வு அபிவிருத்தித்திட்ட நிறைவேற்று உபசெயலகத் திறப்புவிழா நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

யாழ்.மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் சு.ஜெயராஜ தலைமையில் இந்நிகழ்வு ஆரம்பமானது.

நிழ்வில் செயலகப் பெயர்ப் பலகையை சமூகசேவையாளர் பத்மநாதன் திரைநீக்கம் செய்து வைக்க, நிக்கொட் உதவித்திட்ட யாழ.மாவட்ட பணிப்பாளர் நவரட்ணராஜா மண்டபத்தை சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைத்தார். (க)

# வினாடி வினா போட்டி

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தினால் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் குருபூசைத்தினத்தை யொட்டி நடாத்தப்படவுள்ள வினாடி வினாப் போட்டி எதிர்வரும் 29 ஆம் திகதி திங்கட்கிழமை பி.ப. 1.00மணிக்கு வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

பங்குபற்ற விரும்புவர்கள் பெயர், முகவரி, பிறந்ததிகதி கல்வித்தரம் என்பவற்றைக் குறிப்பிட்டு சைவப்புலவர் செ.கந்தசத்தியதாசன் (ஜே.பி) சைவப்பிரசார அமைச்சர் முருகன்திடல், புத்தூர் கிழக்கு, புத்தூர், எனும் முகவரிக்கு எதிர்வரும் 26ஆம் திகதிக்கு முன்னா விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இப்போட்டிக்கு உயர்தர வகுப்பு மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், சைவப்புலவர்கள், சைவசித்தாந்த பண்டிதர்கள், ஆசிரியர்கள் அனைவரும் விண்ணப்பிக்கலாம். வினாக்கள் ஆறுமுகநாவலரைப்பற்றியே அமையும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## மாவீரர் வாரம் நவ.21-27

### விடியலைக் காண்பர்!

இனம் வாழ இன்னுயிரை
இன்பமுட னீந்திட்ட
மனங்கொண்ட மாவீரர்
மறையாத மாதவத்தோர்!

மண்ணதன் நோயையாய்ந்து
மருத்துவம் செய்துவந்தோர்
புண்ணினை அகற்றியென்றும்
புன்மைகள் போக்கிவந்தோர்!

திண்ணமாய் மண்ணைக்காக்க
மண்ணையே மணந்துகொண்டோர்
விண்ணிலே என்றும் நின்று
விடியலைக் காண்பர், சாகார்!

-கூத்தாடி-

### மலர் தூவி சுடரேற்றி....

மலர்தூவி சுடர் ஏற்றி
வணங்குகிறோம்
உங்கள் மலர்ப்பாத தடம் தேடிக்
கலங்குகிறோம்
தமிழீழம் உம் தாகம்
அதை மீட்டுவோம்
தலை கொடுத்தேனும் எமக்கென்றோர்
கொடி ஏற்றுவோம்

-புதுக்கவி

# முகமது அபாஸ் பலஸ்தீன அதிபராவதை அமெரிக்காவும், இஸ்ரேலும் ஆதரிக்கின்றன



பலஸ்தீனத்தின் அடுத்த தலைவரைத் தெரிவுசெய்வதற்கான ஜனாதிபதித் தேர்தல் ஜனவரி 09ஆம் திகதி நடைபெறவுள்ளது.

மறைந்த ஜனாதிபதி யஸீர் அரபாத்திறகு அடுத்தபடியாகப் பலஸ்தீனர்களை வழிநடத்தக்கூடியவர்களைத் தெரிவதற்கான இத்தேர்தலுக்கு முகமது அபாஸை ∴பதா இயக்கம் சிபாரிசு செய்துள்ளது.

கடந்த 11ஆம் திகதி யஸீர் அரபாத் இறந்தபின்னர் பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைவராக முகமது அபாஸ நியமிக்கப்பட்டார்.

அவர் பலஸ்தீனப் பிரதமராகவும் கடமையாற்றியவர்.

இவர் பலஸ்தனத் தலைவராவதை இஸ்ரேலும், அமெரிக்காவும் ஆதரிக்கின்றன.

காசா எல்லைப்பகுதிகளில் பலஸ்தீனர்கள் மேற்கொண்டுவந்த கிளர்ச்சித் தாக்குதல்களுக்கு அபாஸ் எதிர்ப்புத தெரிவித்து வந்தவராவார்.

இதனால் பலஸ்தீன மக்களில் பெரும்பானமையானவர்கள் இவரை நிராகரித்துள்ளனர்.

இந்நிலையில் பலஸ்தீனத் தலைவர் அரபாத்திற்கு நிகராக இன்னொருவர் கிடைக்கும் வரை அதிபர் தேர்தலை நடத்தவேண்டாமென சிலர் கோரி வருகின்றனர். (ப)

## விடுதலை!

ஆப்கானிஸ்தான் தீவிரவாதிகளால் கடத்திச்செல்லப்பட்டு பணயம் வைக்கப்படிருந்த ஐக்கியநாடுகள் சபையின் 3 பணியாளர்களை நேற்றுத் தவிரவாதிகள் விடுதலைசெய்துள்ளனர்.

காபூல் நகரில் வைத்துக் கடந்த ஒருமாத காலத்திற்கு முன்னர் கடத்தப்பட்ட இவர்களுக்கு எந்தவிதப் பாதிப்புகளும் ஏற்படுத்தப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (ப)

## உக்ரேன் நாட்டில் தேர்தல் முடிவுகளை எதிர்த்து எதிர்க்கட்சியினர் ஆர்ப்பாட்டம்

உக்ரேன் நாட்டு ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளை எதிர்த்து அந்நாட்டில் ஆர்ப்பாட்டங்கள் மற்றும் எதிர்ப்புப் போராட்டங்கள் என்பன இடம்பெற்றுள்ளன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற உக்ரேன் நாட்டு ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் நேற்று முன்தினம் வெளியாகின.

இதில் அந்நாட்டுப் பிரதமர் விக்ரர் ஜெனரோவிச், எதிர்க்கட்சித் தலைவர் விக்ரர் இயூச் செம்போவும் போட்டியிட்டனர். இதில் விக்ரர் இய,ச் செம்போவிற்கு 46.7வீத வாக்குகளையும், பிரதமர் ஜெனரோவிச் 49.4வீத வாக்குகளையும் பெற்றுள்ளனர்.

இதனையடுத்து எதிர்க்கட்சித் தலைவரின் ஆதரவாளர்கள் இத்தேர்தல் முடிவுகளை எதிர்த்து வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டங்களை மேற்கொண்டனர்.

இதனால் உக்ரேன் நாட்டு அரசின் செயற்பாடுகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதித். தேர்தலில் பிரதமருக்கு ஆதரவாகப் பல மோசடிகள் இடம்பெற்றுள்ளதாகவும் இதனை ஆராய்ந்து அரசு உடன் நடவடிக்கை எடுக்காவிட்டால உக்ரேன் நாடாளுமன்றம் முன்பாகத் திரண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடப்போவதாக எதிர்க்கட்சியினர் தெரிவித்துள்ளனர். (ப)

## ஈராக் பொதுத்தேர்தலை பிற்போடுக அரபு நாடுகள் கூட்டாகக் கோரிக்கை

### திட்டமிட்டபடி தேர்தலை நடத்த இடைக்கால அரசு முடிவு

ஈராக்கில் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலைப் பிற்போடுமாறு அரபு நாடுகள் கூட்டாகக் கோரிக்கைவிடுத்துள்ளன.

ஈராக்கில் சதாம் ஹுசைனின் ஆட்சி கவிழ்க்கப்பட்டதன் பின் அமெரிக்காவின் தலைமையிலான இடைக்கால அரசு ஒன்று அங்கு நிறுவப்பட்டுள்ளது. இதன் தலைவராக ஜியான் அல்லாவி இருந்துவருகிறார்.

இந்நிலையில் ஈராக்கில் ஜனவரியில் ஒரு பொதுத்தேர்தலை நடத்தி அங்கு ஈராக் அரசினை நிறுவுவதற்குத் திட்டமிட்டுள்ள நிலையில் அதனைக் குழப்பியடிப்பதற்கான முயற்சிகளில் தீவிரவாதிகள் ஈடுபட்டுவருகின்றனர்.

ஜனவரியில் நடைபெறவுள்ள தேர்தலில் மக்கள் சுதந்திரமாக வாக்களிக்கமுடியாதளவிற்குக் குழப்பங்களை விழைவிக்கப்போவதாகவும் எச்சரித்துள்ளனர்.

இதனைக் கவனத்திற்கொண்டே அரேபிய லக், ஈரான், ஜோர்டான் ஆகிய நாடுகள் இணைந்து ஈராக்கின் பொதுத் தேர்தலைச் சிறப்பாக நடத்துவதற்காக ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டபடி ஜனவரியில் அதனை நடத்துமாறு கோரியுள்ளன.

எனினும் பலூஜா நகரை அமெரிக்கக் கூட்டுப்படைகள் கைப்பற்றிய பின்னர் தீவிரவாதிகளின் நடவடிக்கைகள் குறைந்திருப்பதாக ஈராக் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை எதிர்வரும் ஜனவரி மாதம் ஈராக்கில் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலுக்குத் தீவிரவாதிகளின் அச்சுறுத்தல்கள் காணப்படுவதனால் தேர்தல்காலக் கடமைகளுக்கென அமெரிக்கக் கூட்டுப் படைத் தலைமை பல்வேறு நாடுகளிடமிருந்தும படை உதவி கோரியுள்ளன.

அமெரிக்காவின் இக்கோரிக்கையைப் பல நாடுகள் நிராகரித்தாலும் திட்டமிட்டபடி பலத்த பாதுகாப்புகளுடன் தேர்தல் இடம்பெறுமென அமெரிக்கா தலைமையிலான ஈராக் இடைக்கால அரசு அறிவித்துள்ளது.

இதனால் ஈராக் பொதுத்தேர்தலில் மக்கள் திருப்திகரமான முறையில் வாககளிக்கமுடியாமல் போய்விடக்கூடிய அபாயநிலை காணப்படுகிறது.

இது ஈராக்கில் ஜனநாயக முறையிலான அரசு ஒன்று.எதிர்காலத்தில் உருவாக்கப்படுமென்ற நம்பிக்கையை அற்றுப்போகச் செய்துள்ளது. (ப)

WORLD NEWS உலக தரிசனம்

## அமெரிக்காவில் விமான விபத்து ஜோர்ஜ் புஷ் மயிரிழையில் பிழைத்தார்

அமெரிக்க முன்னாள ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் பயணம் செய்யவிருந்த ஜெற் விமானம் பயணத்திற்கு முன்பதாகவே வெடித்துச் சிதறியதில் விமான ஓட்டிகள் மூவர் உடல்கருகிப் பலியாகியுள்ளனர்.

அமெரிக்காவின் தற்போதைய ஜனாதிபதி ஜோாஜ டபள்யூ புஷ்ஷின் தந்தையாரான ஜோர்ஜ் புஷ் இந்த ஜெற் விமானம் மூலம் ஈக்வடோரில இடம்பெறவிருந்த முக்கிய மாநாடு ஒன்றிற்குச் செல்லவிருந்தார்.

ஹுசன் விமான நிலையத்திலிருந்து இவ்விமானம் மூலம் ஜோாஜ் புஷ் புறப்படுவதற்கு சிலகண நேரத்திற்கு முன்பதாகவே இவ்விமானம் விபத்துக்குள்ளாகியது.

வேறு ஒரு விமான நிலையத்திலிருந்து ஹுசன் விமான நிலையத்தில் தரையிறங்க முற்பட்ட வேளையிலேயே



உயாந்த கோபுரம் ஒன்றுடன் மோதி இவ்விமானம் வெடித்துச்சிதறியது.

இதனால் அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி புஷ் தனது ஈக்வடோர் பயணத்தை இரத்துச் செய்தார். (ப)

## பொய் என்று தெரிந்தே பொய் கூறுகிறார்கள்

கொலைவழக்குத் தொடர்பாக காஞ்சி ஜெயேந்திரர் கைதுசெய்யப்பட்டதில் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்திக்குத் தொடர்பிருப்பதாக விஸ்வ ஹிந்து பரீசத்தின் செயல் தலைவர் அசோக சிங்கா கூறியிருப்பதற்கு தி.மு.க தலைவர் கருணாநிதி கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை விடுத்துள்ள அறிக்கையில், கூறுவது பொய் என்று தெரிந்தே திட்டமிட்டு அசோக் சிங்கா இவ்விதம் கூறியுள்ளது விசமத்தனமானது என்று தெரிவித்துள்ளார்.

தமிழக அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளையும் கைதுசெய்ததற்கான காரணங்களையும் சட்டமன்றத்தில் முதலமைச்சா ஜெயலலிதா அறிக்கையாகவே வாசித்து அந்த விபரங்கள் நாடு முழுவதும் வெளிவந்துள்ளது.

இந்நிலையில், அசோக் சிங்காவிற்கு மட்டும் தமிழநாட்டின் முதலமைச்சா யார் என்று இன்னமும் தெரியாமல் சோனியா காந்தி மீது வீண்பழி சுமத்துவதாகத் தெரிவித்துள்ளார்.

சோனியா காந்தியையும் கைது



சம்பவம் நடைபெற்ற ஆந்திராவின் முதலமைச்சர் ராஜசேகர ரெட்டியையும் கிறிஸ்தவர்கள் என்று சுட்டிக்காட்டிக் குற்றம் சாட்டுவது தேவையற்ற மதமார்ச்சரியத்தைத்தூண்டிவிடும் சூழ்ச்சியாகும் என்றும் அசோக் சிங்கா போன்றோர் நடத்தும இந்தத திசைதிருப்பும் செயல் வன்மையாக் கண்டிக்கத்தக்கது என்றும் அவர் தெரிவிததுள்ளார். (து)

## ஜி – 20 நாடுகளின் கூட்டம் அடுத்த ஆண்டு சீனாவில்

தொழில்வளம்மிக்க செல்வந்த நாடுகளும், வளர்முக முன்னணி நாடுகளும் பங்குபற்றும் ஜி- 20 அமைப்பின் கூட்டம் அடுத்த ஆண்டு முற்பகுதியில் சீனாவில் நடைபெறவுள்ளது.

இவ்வமைப்பின் தற்போதையத் தலைமையாகவுள்ள ஜேர்மனியிடமிருந்து அடுத்த ஆண்டு முதல் சீனா இவ்வமைப்பின் தலைமைப் பதவியைப் பொறுப்பேற்க வுள்ளது.

உலகநாடுகளிடையே ஒத்துழைப்பை ஏற்படுத்துவது, உலக சமாதானத்தையும் அமைதியையும் உருவாக்குவது, தொழில்நுட்ப வளர்ச்சி போன்றவற்றை இலக்காகக்கொண்டே இது இடம்பெறுகிறது.

இதில் கலந்துகொள்வதற்காக உலகத் தலைவர்கள் சீனாவிற்குப் பயணமாகின்றனர். (ப)

## ஐ.நா.பிரதிநிதிகள் மீது பாலியல் விசாரணை

ஹொங்கோ நாட்டில் கடமையிலிருந்த 150 ஐக்கிய நாடுகள் சபைப் பிரதிநிதிகள் பாலியல் துஸ்பிரயோகத்தில் ஈடுபட்டமை குறித்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இவர்கள் மீதான குற்றச்சாட்டுகளுக்கு வடியோநாடாக்களும், புகைப்படங்களும் ஆதாரமாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

# பொலிஸாருக்கு எதிராக மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

(மட்டக்களப்பு)

கல்முனை, மருதமுனை சம்ஸ் மத்திய கல்லூரி மாணவர்கள் நேற்று முன்தினம் பொலிஸாருக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த மார்தம் 23 ஆம் திகதி மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டு பள்ளிவாசலுக்கு அருகாமையில் வீசப்பட்ட தமது சக மாணவன் முகமது முபாறக் முகமது பாசித் (வயது 15) கொலை தொடர்பான விசாரணைகளில் ஏற்படும் தாமதத்தைக் கண்டித்தே இந்த மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட மாணவர்கள், இந்தக் கொலை தொடர்பான விசாரணைகள் துரிதப்படுத்தப்படவேண்டும். குற்றவாளிகள் கண்டு பிடிக்கப்பட்டு அவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படவேண்டும் போன்றவை உட்பட சில கோரிக்கைகள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். (ற-8)

# பேச்சை ஆரம்பிக்கும் விடயம் அரசின் கைகளிலேயே உள்ளது

## மட்டு. அம்பாறை அரசியல் துறைப் பொறுப்பாளர்

(கொழும்பு)

வடக்கு-கிழக்குப் பிரச்சினையைத் தென்பகுதியினர் நன்கு புரிந்து கொண்டிருந்த போதும் இப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கமுடியவில்லை.

ஆனால், அரசியலில் நிலை பெற்றுக் கொண்டு, தத்தமது பதவிகளைத் தக்க வைத்துக் கொள்வதே அவர்களின் நோக்கமாகும் என விடுதலைப்புலிகளின் மட்டு. அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன் தெரிவித்துள்ளார்.



களுதாவளை மகாவித்தியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மாவீரர்களின் பெற்றோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தென் பகுதியினர் தமது இந்த நோக்கத்தைக் கைவிட்டு இனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண அரசாங்கமும் தென்னிலங்கை அரசியல் வாதிகளும் முன் வரவேண்டும். அப்போது தான் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும்.

இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையை முன்வைத்துப் பேச்சு நடாத்துவதற்குத் நாம் தயாராகவே உள்ளோம். இதற்கான இறுதிமுடிவு அரசின் கைகளிலேயே தங்கியுள்ளது எனவும் கூறினார். (ற-8)

# வறிய மாணவர்களுக்கு இலவச துவிச்சக்கர வண்டி

## மாவீரர் நாள் நிகழ்ச்சியில் பரிசளிப்பு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை நடாத்திய மாவீரர் நாள் விவாதச் சுற்றுப்போட்டியின் இறுதிப் போட்டியும் பரிசளிப்பு நிகழ்வும் கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு 8.00மணிக்கு மாணவர் பேரவையில் மாணவர் பேரவைத் தலைவர் ப.பகிர்தரன் தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் பொதுச் சுடரினை பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், கலைப்பீடாதிபதி பேராசிரியர் இரா.சிவச்சந்திரன், பேராசிரியர் என்.சண்முகலிங்கம், யாழ். அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் செம்மணன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

முதல் மாவீரன் லெப்.சங்கரின் திருவுருவப் படத்திற்கு கலாநிதி புஷ்பரட்ணம் ஈகைச் சுடரேற்றி மலர்மாலை அணிவித்தார்.

முதல் பெண் மாவீரர் லெப். மாலதியின் திருவுருவப் படத்திற்கு கிளிநொச்சி தொழிநுட்பக்கல்லூரி அதிபர் பிரபாகரன் ஈகைச் சுடரேற்றி மலர்மாலை அணிவித்தார். தொடர்ந்து அகவணக்கம், மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

விவாதச் சுற்றின் இறுதிப் போட்டியில் யாழ்.பல்கலைக் கழக விவாத அணியினரும், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அணியினரும் தமிழர்களின் இருப்பை அழித்தொழிப்பதில் விஞ்சி நிற்பது ஜே.ஆர்.ஜயவர்த்தனாவா? சந்திரிகாவா? எனும் தலைப்பில் இடம்பெற்றது. இதில் சந்திரிகாவே என வாதிட்ட பல்கலைக்கழக விவாத அணி முதலாம் இடத்தைப் பெற்றது.

தொடர்ந்து தமிழீழத் தேசியத் தலைவரின் சிந்தனைகள் அடங்கிய கைந்நூல் வெளியீடு இடம்பெற்றது. இந்நூலினை யாழ்.மாவட்ட அரசியல் துணைப் பொறுப்பாளர் செம்மணன் வெளியிட்டு வைக்கப் பேராசிரியர் மோகனதாஸ் பெற்றுக் கொண்டார் மாவீரர் நாள் நினைவாக வெளியிடப்பட்ட கவிதை ஒலிப்பேழையை நல்லூர்க் கோட்ட மகளிர் அரசியல் துணைப் பொறுப்பாளர் பூமகள் வெளியிட்டு வைக்க கலாநிதி புஷ்பரட்ணம் அதனைப் பெற்றுக் கொண்டார்.

அதனைத் தொடர்ந்து தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த வறியமாணவர்களுக்கான துவிச்சக்கரவண்டி வழங்கல் நிகழ்வு இடம்பெற்றது.

இத்துவிச்சக்கர வண்டிகளை சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைப் பொறுப்பாளர் ந.கண்ணன் மற்றும் யாழ்.மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் எழிலன்பன் ஆகியோர் வழங்கினர்.

விவாதச் சுற்றுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களை பேராசிரியர் மோகனதாஸ் யாழ்.மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவிழி, பேராசிரியர் பி.சிவநாதன் ஆகியோர் வழங்கினர்.

சிறபபுரைகளை கிளிநொச்சி தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் பிரபாகரனும், யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ்ஸும், யாழ்.மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் செம்மணன் ஆகியோர் ஆற்றினர். (ப-9)

## கலந்துரையாடல்

(திருநெல்வேலி)

சிறு இலகு ரக ஆயுத பரம்பலைத் தடுப்பதற்கான தேசிய ஆணைக்குழு, விசேட கலந்துரையாடல் ஒன்றை யாழ்ப்பாணத்தில் வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் நடாத்தவுள்ளது.

தெற்காசிய சிறு ஆயுத எதிர்ப்பு வலைப்பின்னலூடாக நடைபெறவுள்ள இக் கலந்துரையாடல், எதிர்வரும் டிசம்பர் மாதம் 2 ஆம் திகதி மு.ப 9.30 மணி முதல் 1.00 மணி வரை மேற்படி மண்டபத்தில் நடைபெறும். (க-43)

## மணற்காட்டில் மர்மப் பொருள் மீட்பு

(திருநெல்வேலி)

பூகோள வடிவிலான எக்ஸ்.என்.வி. (X.N.V)என்ற ஆங்கில எழுத்துப் பொறிக்கப்பட்ட மர்மப் பொருள் ஒன்று வடமராட்சி கிழக்கு மணற்காட்டுக் கடலில் கரையில் கரை ஒதுங்கியுள்ளதாகத் தெரிவிக்கப் படுகின்றது.

இதனை அவதானித்த படையினர் குறிப்பிட்ட மர்மப் பொருளை பாதுகாப்பாக அகற்றியுள்ளதாகவும், இது வெடிகுண்டாக இருக்கக்கூடும் என்பதால் அதனை பரிசோதனை செய்ய படையினர் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப் படுகின்றது. (க-43,35)

## முதன் முதலாக வவுனியாவில் விசேட இராணுவப் பயிற்சி

(வவுனியா)

வவுனியாவில் முதல் முறையாக இலங்கை இராணுவத்தின் விசேட பயிற்சிபெற்ற 86 இராணுவத்தினர் கடந்த ஞாயிற்றுக் கிழமை பயிற்சியை முடித்து வெளியேறினர்.

இலங்கை இராணுவத்தின் இரண்டாவது கொமாண்டோவுக்குரிய பயிற்சி முதல் முறையாக வவுனியாவில் இடம் பெற்றுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (க-8)

## சேமிப்பு கணக்குகளை ஆரம்பிப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி, கைதடி, கொடிகாமம் ஆகிய மூன்று பகுதிகளிலும் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனது பிறந்த நாள் நிகழ்வுகள் எழுச்சிகரமாகக் கொண்டாடப்படவுள்ளது.

இப் பிறந்த நாள் நிகழ்வுகளிலும் ஓர் அம்சமாக தென்மராட்சியில் வறுமையில் வாடும் முன்பள்ளி சிறார்களுக்கு வங்கி சேமிப்புக் கணக்குகள் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை தென்மராட்சி எழுச்சிப் பேரவையினரும், மாவீரர்நாள் செயற்பாட்டுக்குழுவினரும், தென்மராட்சி அரசியல்துறையினரும் இணைந்து மேற்கொண்டுள்ளனர். (ப-36)

# குடியிருப்புக்களுள் வெள்ளம் இயல்பு வாழ்க்கை பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் கடந்த இரு நாட்களாக தொடந்து பெய்த கடும் மழை காரணமாக தாழ்ந்த பிரதேசங்களிலுள்ள வீடுகளினுள் புகுந்த வெள்ளம் இன்னமும் வடிந்தோடவில்லை.

குடுயிருப்புத் திட்டங்களில் வசிக்கும் மக்களின் வீடுகளினுள் வெள்ளம் புகுந்துள்ளதால் அவர்களுக்கான அடிப்படைத் தேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இதனால் அவர்கள் தமது குடியிருப்புக்களை விட்டு வெளியேற வேண்டியநிலை ஏற்பட்டுள்ளது.

புங்குடுதீவில் மடத்துவெளி வல்லன், பெருங்காடு போன்ற பகுதிகளிலுள்ள வீடுகளினுள் வெள்ளம் புகும் அபாயநிலை ஏற்பட்டுள்ளது.

மழை இன்னும் ஓரிருநாட்கள் தொடர்ந்தால் அவர்கள் இடம் பெயரக் கூடிய நிலை ஏற்படும் எனக் கூறப்படுகின்றது.(ச-8,126)

## கௌரவிப்பு

(கற்கோவளம்)

கற்கோவளம் வாழ் மக்களும், கற்கோவளம் மீனவர் சங்கத்தினரும் இணைந்து கற்கோவளம் பரந்தாமன் தண்ணீர்ப் பந்தலடியில் நினைவுக் கொட்டகை ஒன்றை அமைத்துள்ளனர்.

இதில் எதிர்வரும் 26 ஆம் திகதி மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பும் தேசியத்தலைவரின் 50 ஆவது பிறந்த தின நிகழ்வும் இடம்பெறும். (ப-104)


# பருத்தித்துறை பிரதேசசபை

# கேள்வி அறிவித்தல்

அட்டவணையில் விபரிக்கப்பட்ட 1தொடக்கம் 2 வரையான வேலைகளை நிறைவேற்றுவதற்கு, இக்ராட்டில் பதிவு செய்யப்பட்ட சான்றிதழ் சமர்ப்பிக்கக்கூடிய ஒப்பந்தகாரர்களிடமிருந்தும், அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்தும் இவ்வேலையை நிறைவேற்றுவதற்கு கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

1. படிவ விநியோகம் :- 01.12.2004 பிற்பகல் 3.00 மணி வரை
2. படிவம் ஏற்றல் :- 02.12.2004 நன்பகல் 12.00 மணிவரை
3. படிவம் திறத்தல் :- 02.12.2004 பிற்பக்ல் 2.00 மணிக்கு

அட்டவணை

| வேலை விபரம் | மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்பு | படிவக் கட்டணம் | வற்வரி |
|---|---|---|---|
| 1. ஆலடி வீதி | 6250/- | 300/- | 45/- |
| 2. மயில் ஐயர் வீதி | 1050/- | 300/- | 45/- |

கேள்விகள் யாவும் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு அரக்கு முத்திரை இடப்பட்ட கடித உறையின் இடது பக்க மேல் மூளையில் கேள்வியின் பெயர் குறிப்பிடப்பட்டு மூலப் பிரதி '' செயலாளர், பருத்தித்துறை பிரதேசசபை, புலோலி '' என்ற முகவரிக்கும், இனப்பிரதி '' பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், செட்டித் தெரு, நல்லூர், யாழ்ப்பாணம் '' என்ற முகவரிக்கும் பதிவஞ்சல் மூலமோ அல்லது நேரடியாக சபையின் கேள்விப் பெட்டியில் சேர்ப்பதன் மூலமோ படிவமேற்றல் திகதி, நேரத்திற்கு முன்னர் கிடைக்கச் செய்தல் வேண்டும். கேள்வி சம்பந்தமான விடயங்களில் கேள்விச் சபையின் முடிவே இறுதியானதாகும். மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

பருத்தித்துறை பிரதேச சபை,
தலைமை அலுவலகம்,
புலோலி.
22.11.2004

சிதம்பரப்பிள்ளை பசுபதி,
செயலாளர்,
பருதித்துறை பிரதேசசபை,
புலோலி.

(C/742)

# க.பொ.த (சாதாரண தரம்) மாதிரிப் பரீட்சை - 2004


## கணிதம் பகுதி II

நேரம்: 3மணி

ஆக்கம்: திரு.கதிரேசு பத்மநாதன்,
கட்டுவன்புல மகாவித்தியாலயம்.

*முதலாம் வினாவிற்கும் ஏனைய ஏழு வினாக்களுக்குமாக மொத்தம் எட்டு வினாக்களுக்கு விடை தருக.*

01.(a) தரம் 11 மாணவர்கள் ஒரு சிற்றுண்டிச்சாலைக்குச் சென்று, அனைவரும் தேனீர் அருந்தினர். அவர்களுள் சிலர் வடை, வாழைப்பழம், மோதகம் என்பன உண்டனர். அவர்கள் பற்றிய விபரம் பின்வரும் வென னுருவில் காட்டப்பட்டுள்ளது.




V - வடை உண்டோர்
P - வாழைப்பழம் உண்டோர்
M - மோதகம் உண்டோர்

பின்வருவனவற்றிற்கு விடை தருக.

i) வடை உண்டோர் எத்தனை பேர்?
ii) வாழைப்பழமும் தேனீரும் மட்டும் உண்டோர் எத்தனை பேர்?
iii) வடை or வாழைப்பழம் or மோதகம் உண்டோர் 15 பேர் எனின், மோதகம் உண்டோர் எத்தனை பேர்?
iv) 7பேர் தேனீர் மட்டும் அருந்தினர் எனின் சிற்றுண்டிச்சாலைக்குச் சென்றோர் எத்தனைபேர்?

(b) ஒரு செவ்வகத்தின் நீளமானது அதன் அகலத்தின் இருமடங்கிலும் 2 மீற்றர் கூடியது. அதன் அகலத்தை xமீற்றர் எனக் கொண்டு

i) நீளத்திற்கு x சார்பான கோவையை எழுதுக.
ii) செவ்வகத்தின் பரப்பளவு 144 சதுரமீற்றர் எனின் ஏற்ற சமன்பாடு ஒன்றினை ஆக்கவும்.
iii) சமன்பாட்டினைத் தீர்த்து xஐக் காண்க.

(c) அஞ்சல் அலுவலகம் ஒன்றில் பின்வரும் அறிவித்தல்கள் ஒட்டப் பட்டிருந்தன.


1) உள்ளூர் தபாற்கட்டணம்: ரூபா 4.50
2) கடுகதித் தபாற்கட்டணம்: ரூபா 15.00
3) பார்சல் கட்டணம் முதல் 500gக்கு ரூபா 10.00உம் மேலதிகமான ஒவ்வொரு 500ற்கும் (10kg வரை) ரூபா8.00
4) காசுக்கட்டளை அனுப்புவதற்கான கட்டணம் ஒவ்வொரு ரூபா 50.00 அல்லது அதன் பகுதிக்கு ரூபா 1.50 ஆகும். பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

i) 10 உளளூர் தபால்கள் அனுப்பும் செலவிற்கு எத்தனை கடுகதித் தபால்கள் அனுப்பலாம்?
ii) கண்ணன் கொழும்பிலுள்ள தனது சகோதரனுக்கு 5kg 300g நிறையுடைய பார்சல் ஒன்றை அனுப்புவதாயின் எவ்வளவு செலவாகும்.
iii) ரூபா 8725/= இற்கான காசுக்கட்டளை அனுப்புவத்றகான செலவு எவ்வளவு?
iv) xg நிறையுடைய $(500g<x<1kg)$ பார்சலும் ரூபா a பணமும் (இங்கு a-50 இன் மடங்கு) காசுக்கட்டளையாக அனுப்புவதற்கு மான மொத்தச் செலவினை x, a என்பன சார்பாகத் தருக.

(d) ஒருவர் தனியே கிணறு ஒன்றை வெட்டுகின்றார். 1ஆம் நாள் 90cm ஆழமும், 2ஆம் நாள் 80cm ஆழமும், 3ஆம் நாள் 70cm ஆழமும் ஆக, இவ்வாறு தொடர்ந்து வெட்டிச் செல்கின்றார்.

i) 1ஆம்,2ஆம்,3ஆம் நாள்களில் வெட்டிய ஆழமானது எவ்வகை விருத்தியின் உறுப்புகளாக உள்ளது.
ii) இவ்விருத்தியின் உறுப்பு காண்பதற்கான சூத்திரத்தினை எழுதுக.
iii) இதனைப் பயன்படுத்தி அவர் 8ஆம் நாளில் எத்தனை cm ஆழத்திற்கு வெட்டுவார் எனக் காண்க.
iv) 8 நாள்களிலும் மொத்தமாக எத்தனை cm ஆழத்திற்கு கிணற்றினை வெட்டியிருப்பார் என்பதை சூத்திரத்தைப் பயன்படுத்திக் காண்க.


(e)




A,B என்பவற்றை மையங்களாக வுடைய இரு வட்டங்கள் ஒன்றையொன்று C,D இல் வெட்டுகின்றன. CD இன் நடுப்புள்ளி x ஆகும்.

i) ACக்குச் சமனான பக்கம் எது? காரணம் தருக.
ii) $\triangle$ AXC உடன் ஒருங்கிசையும் முக்கோணி ஒன்றின் பெயரினை எழுதுக.
iii) இம்முக்கோணிகள் எந்நிபந்தனையின் கீழ் ஒருங்கிசையும்.
iv) இதேபோல் ஒருங்கிசையும் இன்னொரு முக்கோணச் சோடிகளை ஏழுதவும்.
v) AXB என்பது ஒரு நேர் கோடாகுமா? காரணம் தருக.

(f) 51 மாணவர்கள் கணிதபாடப் பரீட்சை ஒன்றில் பெற்ற புள்ளிகள் திரள்மீடிறன் வரைபில் காட்டப்பட்டுள்ளது.



i) எத்தனையாவது மாணவன் பெற்ற புள்ளி இடையமாகும்.
ii) 1ம் 3ம் காலணைகளை வரைபிலிருந்து காண்க.
iii) இதிலிருந்து காலணையிடை வீச்சைக் காண்க.
iv) இம்மாணவர்களில் 1/3 பங்கினர் சித்தியடைவில்லை எனின் சித்திப் புள்ளியைக் காண்க.

02. i) ரூபா 50,000ஐ 8% கூட்டுவட்டிக்குக் கடனாக வாங்கிய ஒருவர் 2 வருடமுடிவில் திருப்பிச் செலுத்தவேண்டிய பணம் எவ்வளவு?
ii) ரூபா 50,000ஐ 10% எளிய வட்டிக்குக் கடனாக வாங்கியிருந்தால் 2 வருடங்களில் திருப்பிச் செலுத்தவேண்டிய தொகை எவ்வளவு?
iii) ரூபா 50,000ஐ 10 சமமான மாதத் தவணைக் கட்டணங்களாகத் திருப்பிச் செலுத்துவதாகக் கடன் வாங்கிய ஒருவர் தவணைக் கட்டணமாக ரூபா 5100ஐக் கட்டுகின்றார் எனின்

அ) அவர் செலுத்தும் வட்டித் தொகை யாது?
ஆ) மாத அலகுகளின் எண்ணிக்கை யாது?
இ) ஒரு மாத அலகுக்கான வட்டி யாது?
ஈ) வட்டியின் சதவீதம் யாது?

03. (a) நூல்நிலையம் ஒன்றிலுள்ள அலுமாரியில் மொத்தம் 10 தட்டுக்கள் உள்ளன. அதில் 3 தட்டுக்கள் புதியன. 7 தட்டுக்கள் பழையன. ஒவ்வொரு தட்டிலும் 4 கதைப்புத்தகங்களும், 3 கவிதைப் புத்தகங்களும் உள்ளன. ரவி அங்கு சென்று ஒரு புததகத்தை எடுத்து வாசிக்கின்றார்.

i) ரவி புத்தகம் எடுத்து வாசிக்கும் நிகழ்ச்சிகளைக் காட்டுவதற்கான பொருத்தமான புள்ளிவர்ரைபினை வரைக.
ii) ரவி பழைய தட்டில கதைப்புத்தகம் எடுத்து வாசிக்கும் நிகழ்ச்சிகளைச் சுற்றி செவ்வகவடிவில் அடைத்து அதனை A எனப் பெயரிடுக; P(A) ஐக் காண்க.
iii) ரவி புதிய தட்டில் கவிதைப் புத்தகத்தை எடுத்து வாசிப்பதற்கான நிகழ்ச்சியை B எனக் குறித்து p(B) ஐக் காண்க.
iv) A,B ஆகிய நிகழ்ச்சிகள் இடைவெட்டுவனவா? P(AnB) இன் பெறுமானம் யாது?
v) p(AuB)ஐக் காண்க. இந்நிகழ்தகவு எதனைக் குறிக்கின்றது?

(b) 100 வெடிகள் கொண்ட ஒரு பெட்டியில் 10 வெடிகள் வெடிக்காதன. அடுத்தடுத்து இரு வெடிகள் எடுக்கும்போது அவை வெடிக்கும், வெடிக்காதிருக்கும் என்பதனைக் காட்டுவதற்கான மரவரிப்படம் ஒன்று வரைக.

இதிலிருந்து எடுக்கப்படும் இரு வெடிகளும் வெடிப்பதற்கான நிகழ்தகவினைக் காண்க.

04.

| நூல்களின் எண்ணிக்கை | 0-5 | 6-10 | 11-15 | 16-20 | 21-25 | 26-30 |
|---|---|---|---|---|---|---|
| வாசித்த மாணவர் தொகை | 3 | 7 | 5 | 15 | 6 | 4 |

நூலக வாரத்தையொட்டி ஒருவாரத்தில் நூலகத்திற்குச் சென்ற மாணவர்கள் 40 பேர் வாசித்த நூல்களின் எண்ணிக்கை பற்றிய விபரம் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

i) ஆகார வகுப்பு யாது?
ii) இடைய வகுப்பு யாது?
iii) இடைய வகுப்பின் நடுப்பெறுமானத்தை உத்தேச இடையாகக் கொண்டு மாணவர்கள் வாசித்த நூல்களின் எண்ணிக்கையின் இடையைக் காண்க.
iv) அவ்வாரத்தில் 100 மாணவர்கள் அந்நூலகத்திற்குச் சென்றிருந்தால் மொத்தமாக எத்தனை நூல்களை அவர்கள் வாசித்திருப்பார்கள் எனக் காண்க.
v) 20 நூல்களுக்கு மேல் வாசித்த மாணவரின் எண்ணிக்கை முழு மாணவர் தொகையின் என்ன சதவீதம்?

05. நேர் விளிம்பு cm/mm அளவுகோல், கவராயம் என்பனவற்றை மாத்திரம் பயன்படுத்தி PQ=6.1cm, PS=3.8cm, $\hat{SPQ}=75^0$ ஆகிய அளவுகளையுடைய $\triangle$PQSஇனை அமைக்கவும். SQஐ அளந்து எழுதவும்.

SQ இலிருந்து 4.0cm தூரத்திலும் SR=RQ ஆகவும் இருக்கும் படியாக உள்ள புள்ளி R இனைக் குறிக்கவும். SR,RQஇன் நீளங்கள் யாது?

நாற்பக்கல் PQRS இன் பரப்பளவிற்குச் சமபரப்பளவுடையதும் PQஐ அடியாகவும் கொண்ட $\triangle$PQT இணை அமைக்கவும்.

06.

| | | |
|---|---|---|
| | Y | |
| | 20 | |
| | 18 | 2 E |
| C 8 | 14 | 3 D |
| B 6 | 12 | |
| | 10 | 2 A |
| | 00 | |
| | X | |

பூந்தோட்டம் ஒன்றிலுள்ள பூமரங்கள் A,B,C,D,E என்பவற்றின் அமைவினை அளந்து குறிக்கப்பட்ட புல ஏட்டுக் குறிப்பு தரப்பட்டுள்ளது (தூரங்கள் மீற்றர்).

a) i) 1cm:2m எனும் அளவிடையைப் பயன்படுத்தி அளவிடைப் படத்தினை வரைக.
ii) அளவிடைப்படத்தில் XADEYCB என்னும் உருவின் பரப்பளவினைக் காண்க.
iii) உண்மையான பரப்பளவினைக் காண்க?

b) ஆறு ஒன்றின் ஒரு கரையிலுள்ள புள்ளி Sஇலிருந்து மனிதன் ஒருவன் ஆற்றின் மறுகரையிலுள்ள 10m உயரமான மரத்தின் உச்சியினை $30^0$ 11' எனும் ஏற்றக்கோணத்தில் அவதானிக்கின்றான். மனிதனின் உயரம் 1m எனின்,

i) தகவலைக் குறிக்கும் பருமட்டான படம் ஒன்று வரைக.
ii) ஆற்றின் அகலத்தைக் காண்பதற்கான திரிகோணகணித சமன்பாட்டினை எழுதுக.
iii) சமன்பாட்டிலிருந்து ஆற்றின் அகலத்தைக் காண்க?

(..7.பக்கம் பார்க்க)

(கணிதம் பகுதி II இன் தொடர்ச்சி...)

07. i)நடுப்புள்ளித் தேற்றத்தினைக் கூறி நிறுவுக?

ii)$\triangle PQR$ இல் பக்கம் PR இன் மீது S,T எனும் புள்ளிகள் PS=ST=TR ஆகுமாறு குறிக்கப்பட்டுள்ளது. PQற்குச் //ஆக S,T இனூடாக வரையப்படும் நேர்கோடானது QRஐ முறையே V,U என்பவற்றில் சந்திக்கின்றன.

PQ+TU = 2 SV என நிறுவுக.

08.சார்பு $y=3-4x-4x^2$ இன் வரைபை வரைவதற்குப் பெற்ற x இனதும் y இனதும் பெறுமானங்களைக்கொண்ட பூரணமற்ற அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| X | -2½ | -2 | -1 | -½ | 0 | 1 | 1½ |
| Y | -12 | ....... | ....... | -4 | ....... | ....... | 12 |

(a) i)மேற்படி அட்டவணையை உமது விடைத்தாளில் பிரதிசெய்து அதில் உள்ள வெற்றிடங்களை நிரப்புக.

ii)வரைபுத்தாளில் x அச்சுவழியே 10 சிறிய பிரிவுகளை ஓர் அலகாகவும் y அச்சு வழியே 10 சிறிய பிரிவுகளை 2 அலகாகவும் வகைக் குறிக்குமாறு அளவிடையை எடுத்து குறித்த சார்பின் வரைபை வரைக.

(b) உமது வரைபைப் பயன்படுத்தி

i)அதன் சமச்சீர் அச்சை வரைக.

ii)சமச்சீரச்சின் சமன்பாட்டினை எழுதுக.

iii)சார்பின் பெறுமானமானது நேராக உள்ள xஇன் பெறுமான வீச்சை எழுதுக.

iv)பொருத்தமான நேர்கோடு ஒன்றை வரைவதன் மூலம் $1-4x-4x^2=0$ இன் மூலகங்களை எழுதுக?

v)மேற்குறித்த வரைபில் இருந்து சார்பு $y=5-4x-4x^2$ இன் உயர்வுப் பெறுமானத்தை உய்த்தறிக.

09.(a) உள் ஆரை 1cm, வெளி ஆரை 3cm உம் 20cm நீளமுடைய உருளை வடிவமான செப்புக்குழாய் செய்வதற்குத் தேவையான பதார்த்தத்தின் கனவளவினைக் காண்க.

(b) இக்குழாயானது உருக்கப்பட்டு 0.8cm விட்டம் உடைய சிறிய சிறிய கோளங்களாக உருட்டி எடுக்கப்படுகின்றது.

i)ஒரு சிறிய கோளத்தின் கனவளவு யாது?

ii)செய்யப்படக்கூடிய முழுக் கோ்ளங்களின் எண்ணிக்கை யாது?

iii)எஞ்சிய செப்பின் கனவளவு யாது?

(r ஆரை, h உயரமுடைய உருளையின் கனவளவு $\pi r^2h$; rஆரையுடைய கோளத்தின் கனவளவு $4/3\pi r^3$ எனக் கொள்க.

10.பின்வரும் ஒருங்கமை சமன்பாடுகளைத் தீர்க்குக.

(a) a+2b=5
-3a+b=-1

(b)A:B=2:3; B:C=2:5 எனின் A:B:C உள்ள விகிதத்தைக் காண்க? ரூபா 15000ஐ A,B,Cஇற்கு இடையே பங்கிடுக.

(c)$3x^2-X-1 = 0$ எனும் சமன்பாட்டினை வர்க்கபூர்த்தி முறையில் தீர்த்து விடையை இரு தசம தானங்களுக்குத் திருத்தமாகத் தருக.

## (கணிதம் பகுதி I இன் விடைகள்

01.ரூபா 63 02.(x+a+y) (x+a-y) 03. a 04. $x=60^0$

05.$1011_{இரண்டு}$ 06.1 07.5% 08.$240\div8=30cm^2$

09.b=5 10.$x+y=180^0$ 11.$18(x+y)^2$ 12.(-1,-1)

13.நான்கு எண்களின் கூட்டுத்தொகை =12.5x4=50
ஐந்து எண்களினதும் கூட்டுத்தொகை=60
இடை= $60 \div 5=12$

14. I இணைகரம் II ஒரு சோடி அடுத்துள்ள பக்கங்கள் சமனாக இருக்க வேண்டும்

15.P(X)=1-08
=0.2

16.கதி= $\frac{900 \times 30}{1000}$ $kmh^{-1}=27kmh^{-1}$

17. $\frac{\sqrt[3]{2}}{3} = \sqrt{2}$

18. $S=ut+\frac{1}{2}ft^2$
$S=10x2 + \frac{1}{2} x(-4)x2^2$
=20 -8
S=12

19.lg60=lg2x3x10
=lg2+lg3+lg10
=a+b+1

20. I$\triangle ABD$ உம்,$\triangle ACE$ உம்
II CEஎனும் பக்கம்

22. Iபங்குகளின் எண்ணிக்கை= $\frac{48000}{12}=4000$
IIரூபா =4000 x10 = ரூபா 40000
III $\frac{8}{100}$ x 40000=ரூபா 3200

21. $x^2-x-72=0$
$x^2-9x+8x-72=0$
x(x-9)+8(x-9) =0
(x-9) (x+8) =0
x-9=0 அல்லது x+8=0
x=9 அல்லது x=-8

23. Iவில் AB இன் நீளம் $= \frac{30}{360} \times 2 \times \frac{22}{7} \times 7$
$= \frac{44}{12} = 3.7cm$
II தேவையான கம்பியின் நீளம் =3.7+7+7cm
=17.7cm

24.I $330^0$
II $(100m,330^0)$


25. $\frac{4}{3} + \frac{25}{6} \div \frac{5}{3} - 3$
$= \frac{4}{3} + \frac{25}{6} \times \frac{3}{5} - 3$
$= \frac{4}{3} + \frac{5}{2} - 3$
$= \frac{8+15-18}{6} = \frac{5}{6}$

26. $\frac{4x}{(x-3)} + \frac{6}{2(x-3)}$
$= \frac{8x+6}{2(x-3)} = \frac{2(4x+3)}{2(x-3)} = \frac{4x+3}{(x-3)}$

27. $\frac{1.2}{0.6} = 2$

29. I $\frac{5-2}{3-0} = \frac{3}{3} = 1$ II சமன்பாடு y=x+2 III பெரியது

28.I தாதிகளுக்கு ஒதுக்கப்பட்ட
கோணம் $=220^0$
∴தாதிகளின் எண்ணிக்கை
$= \frac{2}{40} \times 220$
=11பேர்
II 18பேர்

30.



பைதகரசின் தேற்றப்படி
$x^2+(\sqrt{3})^2 = 2^2$
$x^2+3=4$
$x^2=1$
$x^2=1^2$
x=1

∴கோசைன்Ø =1/2 ——— I
சைன் (90-Ø) =1/2 ——— II
I,II ஐ ஒப்பிடுவதால்
கோசைன்Ø = சைன் (90-Ø)

## இவரைத் தெரியுமா பரிசுப்போட்டி இல -37

### படத்தில் இருப்பவர் யார் தெரியுமா?



தென்னிந்திய பாடகர்கள் வரிசையில் தந்தையைப் போலவே பிரகாசித்து வரும் இவரை உங்களுக்குத் தெரிந்தால் உங்கள் விடைகளை எழுதி எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைககவும். நீங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

**இவரைத் தெரியுமா?**
**போட்டி இல:- 37**
**'வலம்புரி – சங்குநாதம'**
**இல:- 15, வெள்ளாந்தெரு,**
**வண்ணார்பண்ணை,**
**யாழ்ப்பாணம.**



**குறிப்பு:-**
சரியான விடை எழுதுபவர்களில் மூன்று போட்டியாளர்களுக்கு குலுக்கல் முறைமூலம் தெரிவுசெய்யப்பட்டு பரிசு வழங்கப்படும்.

பரிசுபெறும் அதிஷ்டசாலிகள் தமக்கான பரிசுப்பணத்தினை 'வலம்புரி' காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளவும்.

**இவரைத் தெரியுமா? பரிசுப் போட்டி இல:– 37**

படத்தில் உள்ளவரின் பெயர் :-...........................
அனுப்புபவரின் முழுப்பெயர் :-...........................
அனுப்புபவரின் முகவரி :-...........................
...........................
...........................

### இவரைத்தெரியுமா? பரிசுப்போட்டி இல - 35
சரியான விடை

நடிகர் கார்த்திக்

**இவரைத் தெரியுமா பரிசுப்போட்டி இல. 35இல் பங்குபற்றிப் பரிசுபெறும் அதிஷ்டசாலிகளின் பெயர் விபரம்**

**முதற் பரிசு** :- ச.திவ்வியன், அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.

**இரண்டாம் பரிசு** :- ம.மயில்வாகனம், சங்கத்தானை, சாவகச்சேரி.

**மூன்றாம் பரிசு** :- K.டிலானி, 2ஆம் ஒழுங்கை, ஸ்ரேசன் றோட், கொக்குவில் கிழக்கு.

சரியான விடை எழுதிப் பாராட்டுப் பெறுவோர் பெயர் விபரம்

ம.ஜெயந்திரன், கொக்குவில். கே.இராஜகோபால் தொல்புரம். பா.பபீதா, க.கனிஸ்ரா, யாழ்ப்பாணம். க.கபிலன், நீர்வேலி. ந.நிரோஜா புங்குடுதீவு. இ.கோபினா, புங்குடுதீவு. யோ.றஜீவன், வட்டுக்கோட்டை. வே.குமாரசுவாமி, கரவெட்டி. கு.சுகந்தி, நாவலர் வீதி. ப.பிரதீபா, கரவெட்டி.திருமதி.எஸ்.பாக்கியநாதன், சங்கானை. T.S.சங்கீதா, சம்பூரணி, வட்டுக்கோட்டை. து.றாம்ஜீத், வதிரி. க.வக்ஷலா, சித்தன்கேணி. என்.ஜே.இரத்தினதயா, ஏழாலை. V.C.சோதிநாதன், பண்ணாகம். வே.முருகானந்தசோதி, பருத்தித்துறை.

வாசகர்களே!

வலம்புரி - சங்குநாதம் பேனா நண்பர் பகுதியில் தமது பெயர்களைப்பிரசுரிக்க விரும்புவோர் தம்மைப் பற்றிய முழு விபரங்களுடன் அடையாள அட்டையின் பிரதியையும் இணைத்து அனுப்பவும். அடையாள அட்டை பிரதியின்றி வரும் பெயர்கள் பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.


-ஆசிரியர்.

## இந்தியா-தென்னாபிரிக்கா

# கான்பூர் கிரிக்கெற் டெஸ்ட் போட்டி

# வெற்றி தோல்வியின்றி முடிய வாய்ப்பு

இந்திய-தென்னாபிரிக்க அணி களிடையே கான்பூரில் நடைபெறும முதலாவது டெஸ்ட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தற் கான வாய்ப்புக்களே அதிகமாகக்



காணப்படுகின்றன.


இரண்டாம் நாள் ஆட்ட முடிவில் 7 விக்கெற்றுக்களை இழந்து 459 ஓட்டங்களைப் பெற்றிருந்த தென்னா பிரிக்க அணி நேற்று முன்தினம் மூன்றாம் நாள் ஆட்டத்தைத் தொடர்ந்து 510 ஓட்டங்களை 9 விக்கெற்றுக்களை இழந்து பெற் றிருந்த போது, தனது முதல் இன் னிங்ஸ் ஆட்டத்தை முடித்துக் கொண்டது.

பனி மூட்டம் காரணமாக ஆட் டம் 2 மணிநேரம் தாமதமாகவே ஆரம்பமானது. ஆட்டமிழக்காது, 31 ஓட்டங்களுடன் இருந்த ஷேன் பொலக்கும், 5 ஓட்டங்களுடனிருந்த புதிய விக்கெற் காப்பாளர் சொலே சிலியும் ஆட்டத்தைத் தொடர்ந்தனர்.

ஆயினும் சொலேசிலி 9 ஓட் டங்களுடன் கும்ளேயின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து பீற்றர்ஸன் சிறப்பாக ஆடி 34ஓட் டங்களைப்பெற்றார். பொலக் ஆட் டமிழக்காது 44 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

பந்துவீச்சில் இந்திய அணி சார்பில் சுழல்பந்து வீச்சாளர் அனில் கும்ளே மிகச் சிறப்பாகப் பந்து வீசி 54 ஓவர்களில் 13 ஓட்டமற்ற ஓவர்களுடன் 131 ஓட்டங்களைக் கொடுத்து 6 விக்கெற்றுக்களைக் கைப்பற்றினார். இதன் மூலம் அவர் டெஸ்ட் போட்டிகளில் மொத்தம் 430 விக்கெற்றுக்களை வீழ்த்தி யுள்ளார். கபில் தேவின் சாத னையை முறியடிக்க இன்னும் 5 விக்கெற்றுக்களே அவருக்குத் தேவை.

ஹர்பஜன்சிங் 2 விக்கெற்றுக் களையும் கங்குலி 1 விக்கெற்




றையும் வீழ்த்தினர். தொடர்ந்து தனது முதலாவது இன்னிங்ஸை ஆடிய இந்திய அணி மூன்றாம் நாள் ஆட்ட முடிவில் விக்கெற் இழப்பின்றி 185 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. வீரேந்தர் ஷெவாக், கௌதம் காம்பீர் ஆகியோர் தலா 85 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்கா திருந்தனர்.

நேற்று நான்காம் நாள் ஆட்டம் தொடர்ந்தபோது ஷேன் பொலக்கின பந்துவீச்சில் புதிய விக்கெற் காப் பாளர் சொலேசிலியிடம் பிடிகொடுதது ஆட்டமிழந்தார். காம்பீர் விக்கெற்றை வீழ்த் தியதன் மூலம் பொலக்



டெஸ்ட் போட்டிகளில் 350 விக்கெற் றுக்களை வீழ்த்தியவர்கள் பட்டிய லில் இணைந்துள்ளார். அதேவேளை புதிய விக்கெற்காப்பாளர் சொலே கில இப்பிடியை எடுத்ததன் மூலம் டெஸ்ட் வாழ்வில் தனது முதலா வது பிடியை எடுத்திருக்கிறார்.

வீரேந்தர் ஷேவாக் 164 ஓட் டங்களுடன் எல்.பி.டபிள்யூ முறை யிலும் சச்சின் டெண்டுல்கர் 3 ஓட் டங்களுடன் நேரடியாக விக்கெற் வீழ்த்தப்பட்டும் ஹோலின் பந்து வீச்சில் 3 ஓட்டங்களுடன் ஆட்டமி ழந்தனர். நேற்று தேநீர் இடைவேளை யின்போது இந்திய அணி 3 விக்கெற் றுக்களை இழந்து 355 ஓட்டங்க ளைப் பெற்றிருந்தது. ராகுல் டிராவிட் 37 ஓட்டங்களுடனும் ஆடிக்கொண் டிருநதனர். ஆட்டம் தொடர்கிறது. (7)



ஸ்பீட் ஸ்கேற்றிங் உலகக் கிண்ணப் போட்டிகளில் ஒரு போட்டியாக பேர்சுயுட் ஓட்டப் போட்டியும் இடம் பெற் றது. இப் போட்டியில் பங்குபற்றிய கொரிய வீராங் கனை களான ஷியாங் குவான் லீ ஜின்- வோ- லீ மற்றும் ஷாங் ஜியோப் ஜியோ ஆகியோரை படத்தில் காணலாம்.

## விளையாட்டு செய்திகள்

# கத்தியால் குத்தப்பட்டு உதைபந்தாட்ட ரசிகர் மரணம்

துருக்கியின் தலைநகரான இஸ் தான்புல்லில் நடைபெற்ற உதை பந்தாட்டப் போட்டியொன்றில் ரசி கர் ஒருவர் கத்தியால் குத்தப்பட்டு மரணமடைந்துள்ளார்.

கடந்த ஞாயிறன்று ரிசஸ்பார் மற்றும் பெஸக்டாஸ் அணிகளி டையே நடைபெற்ற உதைபந்தாட் டப் போட்டியில், ஆட்டத்தின் பாதி நேரத்தின்போது ரிசஸ்பார் அணி 1:0 என்ற கோல் கணக்கில முன் னணியில் இருந்தது.

அவ்வேளை பெஸிக்டாஸ் அணி ரசிகர்களிடையே மோதல் ஏறபட்டது. அம்மோதலின் போது சிகாஸ் அக் டாஸ் என்னும் 16 வயது இளை ஞன் கத்தியால் குத்தப்பட்டு படு காயமடைந்த நிலையில் மருத் துவமனையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் உயிரிழந்தார்.


மைதானத்தில் பொருத்தப்பட் டிருந்த கமெராவின் உதவியுடன் குற்றவாளியைக் கைதுசெய்யும் முயறசியில் பொலிஸார் ஈடுபட்டனர். இதன் காரணமாக ஆட்டம் முடிந் ததும் பார்வையாளர்கள் கடுமை யாக சோதனை செய்யப்பட்ட பின்பே வெளியேற அனுமதிக்கப் பட்டனர்.

போட்டி 2:2 என்ற கோல்கணக் கில் வெற்றி தோல்வியின்றி முடி வடைந்தது குறிப்பிடத்தக்கது. (து-7)

# ஏ.டி.பி.மாஸ்டர்ஸ் டெனிஸ் போட்டி

# சுவிஸ்வீரர் ரோஜர் பெடரா சம்பியன்

அமெரிக்காவின் ஹூஸ்டன் நக




ரில், பிரபல முன்னணி டெனிஸ் நட்சத்திரங்கள் பங்குபற்றிய ஏ.டி. பி. மாஸ்டர்ஸ் டென்னிஸ் போட்டி யில், சுவிற்சர்லாந்து வீரர் ரோஜர் பெடரர் சமபியன் பட்டத்தை வென் றுள்ளார்.

கடந்த ஞாயிறன்று நடைபெற்ற இத் தொடரின் இறுதிப் போட்டி மழை காரணமாக 78 நிமிடங்கள் தாமதமாகவே ஆரம்பமானது. இவ்விறுதிப் போட்டியில் சுவிற் சர்லாந்து வீரர் ரோஜர் பெடரரும் அவுஸ்திரேலிய வீரர் லேடன் ஹெவிட்டும் பங்குபற்றினர்.

2000, மற்றும் 2001ஆம் ஆண்டு களில் இத் தொடரில் சம்பியன் பட்டத்தை வென்ற ஹெவிட் மூன்றாவது தடவையும் வெல்லும் நோக்குடன் களமிறங்கினார். இத னால் இருவரிடையேயும் கடும் போட்டி நிலவுமென ரசிகர்களி டையே பெரும் எதிர்பார்ப்பு இருந் தது. ஆனால் பெடரர் எந்தவித சிரமமுமின்றி 6:3,6:2 என்ற சுலப மான நேர்செற்களில் ஹெவிட்டை வென்றதன் மூலம், இரண்டாவது தடவையாக இத்தொடரில் சம்பி யன் பட்டத்தை வென்றுள்ளார். அத்துடன் இந்த ஆண்டில் பெட ரர் வெல்லும் பதினோராவது சம் பியன் பட்டமாகவும் அவருக்கு இது அமைந்துள்ளது.

இவற்றில் யு.எஸ்.ஓபன் பட்டம், அவுஸ்திரேலிய ஓபன் பட்டம், மற் றும் விம்பிள்டன் பட்டம் ஆசிய கிராண்ட் ஸ்லாம் பட்டங்களும்



அடங்கும்.

மேலும் ரோஜர் பெடரர் தான் விளையாடிய 13 இறுதிப் போட்டி களிலும் வெற்றிபெற்றுள்ளார் என் பது குறிப்பிடத்தக்கது. (து-7)

# கென்யாவின் கிரிக்கெற் வீரர்களிடம்

# கிரி.சூதாட்டம் தொடர்பாக விசாரணை

கென்யாவின் கிரிக்கெற் அணி வீரர்களிடம் கிரிக்கெற் சூதாட்டம் தொடர்பாக விசாரணைகள் நடை பெறவுள்ளத்ாக தகவல்கள் வெளி யாகியுள்ளன.

கென்ய அணியில் முன்னாள் தலைவர் ஒடும்பே மீது அண்மைக் காலமாகக் கிரிக்கெற் சூதாட்டம் தொடர்பாகக் குற்றச்சாட்டு எழுந் தது.

இந்தியாவைச்சேர்ந்த கிரிக் கெற் சூதாட்ட ஒப்பந்தத்தரகர் ஒருவரிடம் அவர் இலட்சக்கணக் கில பணம் பெற்ற விவகாரம் சில மாதங்களின் முன் விஸவரூபமாக உருவெடுத்திருந்தது.

இது தொடர்பாக சர்வதேச கிரிக்கெற்சபை, விசாரணைக்காக அவரை அழைத்திருந்த போதும் அவர் அதற்கு சமூகமளிக்கவில்லை. இதன் காரணமாக ஒடும்பேக்கு 5 ஆண்டுகள் சர்வதேச கிரிக்கெற் போட்டிகளில் விளையாட சர்வ தேச கிரிக்கெற்சபை தடைவிதித் திருந்தது.

தற்போது மேலும் சில கென்ய அணி வீராகளுக்கு சூதாட்டத்தில் தொடர்பு இருப்பதாக தெரியவந் துள்ளது. இதன் காரணமாக விசா ரணை நடாத்துவதற்காக கென்ய அணி வீரர்கள் 14 பேருக்கு அழைப பாணைண அனுப்பப்பட்டுள்ளது. இவர் களிடம் சர்வதேச கிரிக்கெற் சபை யின் சூதாட்ட தடுப்பு அதிகாரி விசாரணை நடாத்த உள்ளார். இவ் விசாரணைகள் எதிர்வரும் 30ஆம் திகதி முதல் டிசம்பர் மாதம் 2ஆம் திகதிவரை நடை பெறவுள்ளன.

இதேவேளை, கென்ய கிரிக் கெற் சங்கத்தினால், அதன் சட்ட விதிகள் மீளாய்வு செய்யும் நட வடிக்கைகளை தடுத்து நிறுத்து மாறு ஐ.சி.சியிடம் கென்யாவின் கரையோரக் கிரிக்கெற் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது., சட்ட விதிகளை மீளாய்வுசெய்ய ஐ.சி.சி. அனுமதி வழங்கியதை அடுத்து இந்நடவடிக்கைகளை மேற்பார்வை செய்ய அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த ஹொக் மோரேமானை ஐ.சி.சி. நிய மித்திருந்தது.

கென்ய கிரிக்கெற் சங்கத்தின் சட்டவிதிகள் மீளாய்வு செய்து திருத்தப்பட்டால், தற்போதுள்ள நிர்வாகத்துறையைக் கட்டுப்படுத்த முடியாது போய்விடுமென்றும் கரை யோர கிரிக்கெற் சங்கம் தனது கோரிக்கையில் சுட்டிக்காட்டியுள் ளது. (து-7)

# இநதயப பயணததல கபஸ இல்லை

# தெ.ஆ. கரககெற சபை அறிவப்பு

தென் ஆபிரிக்க அணியின் இந் தியப் பயணம் எதிலும் கிப்ஸ் பங் கேறக மாட்டாரென தென் ஆபிரிக்க கிரிக்கெற்சபை அறிவித்துள்ளது.

நான்கு வருடங்களுக்கு முன் தென் ஆபிரிக்க அணியின் இந் திய விஜயத்தின் போது அந்த அணியினர் சிலர் மீது சுமத்தப் பட்ட கிரிக்கெற் சூதாட்ட விவகா ரம் தொடர்பாக புதுடெல்லி பொலி ஸார் வழக்குப் பதிவுசெய்து விசா ரணை நடாத்தி வருகிறார்கள். இதில் கிப்ஸூம் குற்றஞ்சாட்டப் பட்டிருந்தார்.

தற்போது இந்தியா சென்றுள்ள தென் ஆபிரிக்க அணியில் கிப்ஸ் பங்குபற்றவில்லை. புதுடெல்லி பொலிஸாரின் விசாரணைக்குப் பயந்தே அவர் விலகிக்கொண்டா எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தியப் பயணத்தின்போது தான் கைது செய்யப்பட மாட்டேன் என்ற உறுதிமொழியை புதுடில்லி பொலிஸார் வழங்கினால் மத்திரமே தன்னால் இந்தியாவுக்கு வர முடி யுமென கிப்ஸ் தெரிவித்திருந்தார். ஆனால் புதுடெல்லி பொலிஸார் அதனை மறுத்துவிட்டதால் அவர் விலகிக்கொண்டார்.

இந்நிலையில், இந்தியாவில் நடக்கும் எந்தப் போட்டியிலும் கிப்ஸ் கலந்துகொள்ள மாட்டா ரென தென் ஆபிரிக்கக் கிரிக்கெற் சபைத்தலைவர் மஜோலா அறி வித்திருக்கிறார்.

கிப்ஸ் மீது விசாரணை எது வும் இடம்பெறாது என்ற உத்தர வாதம் புதுடெல்லி பொலிஸால் வழங்கபபட்டால் மாத்திரமே அவா அணியில் இடம்பெறுவது தொடர் பாக முடிவு எடுக்க முடியுமென வும் மஜோலா கூறியிருக்கிறார்.

கிப்ஸ் இந்திய விஜயத்திலி ருந்து விலகியதற்கு எந்த ஆட் சேபனையும் தெரிவிக்காத தென் ஆபிரிக்க கிரிக்கெற் சபை, 2006 ஆம் ஆண்டு இந்தியாவில் நடை பெறவுள்ள சம்பியன் கிண்ண கிரிக்கெற் போட்டிகளுக்கு முன் னதாக சூதாட்ட விவகாரம் முடி வுக்கு கொண்டுவரப்பட்டால் மாத் திரமே கிப்ஸ் இந்தியாவுக்கு வர முடியுமெனத் தெரிவித்துள்ளது. (து-7)

# உடல் நலத்தைப் பாதிக்கும் ஒவ்வாமை

நமது உடலில் ஒவ்வாமை ஏற்பட அட்ரீனல் சுரப்பிகள் தான் காரணம். இந்த சுரப்பிகளில் ஏற்படும் மாற்றங்களே ஒவ்வாமையை ஏற்படுத்துகின்றன.

பரம்பரையாகவும் ஒவ்வாமை ஏற்படலாம். தந்தைக்கு தோல் வியாதி இருந்தால் மகனுக்கும் அது வரும் சாத்தியக் கூறுகள் அதிகம். மரபணுக்களின் வழியாக இது பரம்பரையைத் தாக்குகிறது. ஆனால் இது கட்டாயம் தொடரும் என்றோ, அல்லது ஒரு நிலையோடு முடிந்து விட்டது என்றோ நிச்சயமாகக் கூற முடியாது.

### சுற்றுப்புறச் சூழ் நிலைகள்

ஒவ்வாமை உண்டாக்கு வதில் சுற்றுப்புறச் சூழ்நிலைகள் முக்கிய பங்காற்றுகின் றன. ஒவ்வாமை யால் வரும் ஆஸ்துமா நோய் பரம்பரையாக வந்தபோதிலும், சுற்றுப் புற சூழ்நிலை மாசடைதலின் காரணமாகவே இது வருகிறது. இதன் காரணமாக குளிர்காலமும், மழைகாலமும், பனிக்காலமும் ஆஸ்துமா நோயாளிகளுக்குச் சோதனையான காலமாகவே அமைகின்றன. தூசிகள், புகை, கற்பூரம், சாம்பிராணிப் புகை, சிகரெட் புகை, கொசு விரட்டிச் சுருள்களின் புகை போன்றவையும் ஆஸ்துமாவை அதிகரிக்கச் செய்யும் காரணிகளாகும். நாம் வசிக்கும் இடத்தில் உள்ள காற்று சுத்தமானதாக இருக்க வேண்டும் என்பது மிகவும் அவசியம்.

நம் வீட்டில் ஒட்டடை அதிகமானாலும் சில கண்ணுக்குத் தெரியாத பூச்சிகளினாலும் ஒவ்வாமை மற்றும் ஆஸ்துமா உண்டாகிறது.

சமயலறை, படுக்கையறை, அடிக்கடி உட்காரும் நாட்காலி போன்றவைகளைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். இல்லையெனின் ஒவ்வாமையின் காரணமாக தும்மல், மூக்கடைப்பு, தொண்டை கரகரப்பு, தலை வலி, இருமல், இழுப்புப் போன்ற உபாதைகள் ஏற்படும்.

வீட்டில் வளர்க்கப்படும் செல்லப்பிராணிகளான நாய், பூனை போன்றவற்றின் முடி களினாலும் ஆஸ்துமா வரவாய்ப்புகள் உள்ளன. அதேபோல் விவசாயத் தொழில் புரிவோர், கோழிப் பண்ணையில் வேலை செய்வோர், இரசாயனத் தொழிற் சாலைகளில் உள்ளவர்கள், செடிகளைப் பராமரிப்போர், மரவேலை செய்பவர்கள், அழகு நிலையத்தில் பணி செய்வோர், முடி திருத்துபவர்கள் போன்றவர்கள் ஒவ்வாமையை உண்டாக்கும் காரணிகளுடன் நெருங்கிய தொடர்பு உள்ளதால் இவர்களுக்கு ஆஸ்துமா வரலாம்.

இவற்றில் பல தொழில் ரீதியாக நடத்தப்படுவதால் இவற்றில் இருந்து விலகியிருப்பது என்பது இவர்களால் முடியாது. எனவே இவர்கள் ஆஸ்துமாவில் இருந்து தப்பிப்பது மிகவும் கடினம்.

மேற்கண்ட இடங்களில் வேலை செய்வோர் மட்டுமன்றி அருகாமையில் குடியிருப்பவர்களும் ஒவ்வாமையினால் பாதிக்கப்பட்டு பல பிரச்சினைகளுக்கு ஆளாகிறார்கள். ஒவ்வாமையால் ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு பாதிப்புகள் ஏற்படுகின்றன.

### உணவுப் பொருட்கள்

பொதுவாகவே உணவுப் பொருட்களில் கட்டுப்பாட்டோடு இருப்பது நல்லது. அதிக எண்ணெய், கொழுப்பு, மசாலா, காரப்பொருட்கள், புளி போன்றவற்றைத் தவிர்க்க வேண்டும். இப்படிக் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிப்பது தான் 'உணவே மருந்து மருந்தே உணவு' என்பதாகும. உணவில் தக்காளி, கத்தரிக்காய், புடலங்காய் சாப்பிட்டால் ஆஸ்துமா தொல்லை மிக அதிகரிப்பதாக உணர்பவர்கள் அதனைத் தவிர்க்கவேண்டும். யாருக்கு எந்தப்பொருள் ஒத்துக்கொள்ளவில்லையோ அதனைத் தவிர்ப்பது தான் ஒவ்வாமை ஏற்படாமல் இருக்க முக்கியமான நடவடிக்கையாகும். மீன், முட்டை, இறைச்சி, நண்டு, கருவாடு போன்றவை சிலருக்குத் தோலில் அரிப்பை உண்டாக்கும். இதனை இவர்கள் தவிர்க்கும் பட்சத்தில் அரிப்புத் தானாகவே சரியாகிவிடும். அதேபோல் குளிர்ச்சியான பொருட்களான ஐஸ்க்கிறீம், குளிர்பானம் போன்றவை சிலருக்கு சளித்தொந்தரவை உண்டு பண்ணும்.

சளிக்காக எந்த மருந்தைச் சாப்பிட்டாலும் நிவாரணம் கிடைக்காது மீண்டும் ஒத்துக்கொள்ளாத பொருட்களைச் சாப்பிடுவதால் இரத்தத்தில் சர்க்கரையின் அளவு ஒரே சீராக அமையாமல் போகும் நிலை ஏற்படும். அதனால் சோர்வு போன்ற தொந்தரவுகளும் உண்டாகும்.

இந்நிலையில் இப்பொருட்களை சாப்பிடுவதைத் தவிர்ப்பதுதான் சரியான மருத்துவமாகும்.

நம் உடலில் போதுமான அளவிற்கு சத்துப்பொருட்கள் இருக்கவேண்டும். இதில் ஏற்படும் மாற்றங்கள் கூட ஒவ்வாமையை ஏற்படுத்துகின்றன.

**டாக்டர்**
**ப.உ.லெனின்**

### மனநிலை

ஒவ்வாமைக்கு மன நிலையும் முக்கிய பங்கை வகிக்கின்றது. அதிக பரபரப்பும் கோபமும் மன உளைச்சலும் கவலையும் உடலில் உள்ள கல்சியத்தைக் குறைக்கின்றன. இதனாலும் ஒவ்வாமை ஏற்பட்டு ஆஸ்துமாவை உண்டாக்குகின்றன. நல்ல அமைதியான மன நிலையும் நல்ல எண்ணமும் நல்ல செயற்பாடும் ஆஸ்துமாவை குறைக்கவல்லவை. நன்றாக செரிமானம் ஆகக் கூடிய உணவுப்பொருட்களையே ஆஸ்துமா நோயாளிகள் சாப்பிடவேண்டும். உணவு நன்கு செரிமானமாகவில்லை எனினும் ஆஸ்துமாவை அதிகரிக்கச் செய்யும். உணவு செரிப்பதற்குக் குறிப்பிட்ட என்சைம்கள் உதவி செய்கின்றன.

அனைத்து விற்றமின்களும், தாதுப்பொருட்களும் சுண்ணாம்புச் சத்தும், என்சைம்களும் ஒவ்வாமையில் முக்கிய பங்கை வகிக்கினறன. நமது உடலில் எதிர்ப்பு சக்தி விளையும் போது சுழற்சி ஏற்படுகின்றது. இந்த ஒவ்வாமையும் சுழற்சியும் சைனஸ் தொந்தரவுகளை உண்டாக்குகின்றன. ஒவ்வாமைக்கான காரணங்கள் ஒவ்வொருவருக்கும் வித்தியாசப்படுவதால் ஹோமியோபதி மருத்துவத்தில் ஒவ்வாமைக்கான மருந்துகளும் ஒவ்வொருவருக்கும் வேறுபடுகின்றன. எல்லாவகை ஒவ்வாமையையும் ஹோமியோபதி மருத்துவத்தால் கட்டுப்படுத்திக் குணப்படுத்த முடியும். விரைவில் நிரந்தரமாக நிவாரணம் பெறலாம். □

## 10 ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 27 - 11 - 1949



உதிர்வு 17 - 11 - 1994

**அமரர்**
**சிவகுரு நவரத்தினம்**

(உரிமையாளர், கனகாபத்திரிகை விற்பனை அகம் திருநெல்வேலி)

திதி : 24.11.2004

நீங்கள் பிரிந்து பத்து ஆண்டுகள் ஆனாலும்
தங்கள் நினைவலைகள் எங்கள் நெஞ்சங்களை
விட்டு நீங்கா
உங்கள் ஆத்மசாந்திக்காக
எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நிரந்தர முகவரி:
கனக இல்லம்,
கைதடி கிழக்கு, கைதடி.

தற்காலிக முகவரி:
இல: 37, பலாலி வீதி,
திருநெல்வேலி.

உங்கள் பிரிவால் துன்புறும்
மனைவி, மக்கள், உற்றார்
உறவினர்கள்.

(C/741)

## ஆன்மீகச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட இந்து சமய விவகார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் ஆன்மீகச் சொற்பொழிவுத்தொடர் நல்லூர் கந்தசாமி முன்றலில் அமைந்துள்ள நாவலர் மணி மணடபத்தில் எதிர்வரும் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணிக்கு இந்து சமய விவகார அலுவல்கள் திணைக்கள உதவப் பணிப்பாளர் சிவத்தமிழ வித்தகர் சிவ.மகாலிங்கம் தலைமையில் இடம்பெறும்.

சிறப்புச் சொற்பொழிவாக "காவக் கமலக் கழலுடன் சேர்த தெனைக் காத்தருள் வாய்" என்ற தலைப்பில் வலிகாம வலய ஆசிரிய ஆலோசகர் சைவப்புலவர் கந்தசத்தியதாஸன் உரை நிகழ்த்துவார். (க-5)

## நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கிராம அபிவிருத்தித் திணைக்கள உத்தியோகத்தராகக் கடமையாற்றிய செ.செல்வரட்ணம் கடந்த மாதம் 15 ஆம் திகதி ஓய்வு பெற்றுச் சென்றதையடுத்து,

இவரது இடத்துக்கு உடுவில் பிரதேச செயலகத்தில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றிய கா.தியாகமூர்த்தி நியமனம செய்யப்பட்டுள்ளார். (ற-5)

## மாவீரர் தின ஏற்பாடுகள்

(திருநாவலூர்)

புலோலி மேற்கு திருநாவலூர் மக்களால் மாவீரர் தின ஏற்பாடுகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கொடிகள் பறக்கவிடப்பட்டு ஒலிபெருக்கிகள் பொருத்தப்பட்டு, விழா ஏற்பாடுகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ப-108)

காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஜெயேந்திர சுவாமிகளின் கைது இந்தியா முழுவதிலும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

காஞ்சி காமகோடி பீடமென்பது நேற்று இன்று தோற்றம் பெற்றதல்ல. அதற்கு இரண்டாயிரம் ஆண்டுகள் வரலாற்றுப் பெருமை உண்டு.

காஞ்சி காமகோடி பீடம் இந்தியா

இதுபோன்று எத்தனையோ நிகழ்வுகள் இந்துசமய வரலாற்றில் உண்டு.

ஏன் நம் ஈழத்துச் சித்தர்களில் ஒருவராகிய கடையிற் சுவாமிகளைக் கூட பொலிஸார்கைது செய்து அடைத்து வைக்கவில்லையா? இவையெல்லாம் இறைவனின் திருவிளையாடல் என்று ஏற்றுக்கொண்ட நாம், ஜெயேந்திரரின் கைதையும்அக்கிரமவாதி

கப்போகின்றது என்ற நம்பிக்கையோடு இந்துக்கள் காத்திருக்கின்றனர்.

### நுணலும் தன் வாயால் கெடும்

சங்கரராமனின் கொலையுடன் தொடர்புடைத்தி ஜெயேந்திரரைக் கைது செய்வதற்கு தமிழகப் பொலிஸார் பல சான்றாதாரங்களை முன் வைத்துள்ளனர். பொலிஸாரால் முன்



# ஆன்மீகத்துடன் விளையாடும்

வில் உள்ள இந்துக்களின் ஓர் தலைமைப்பீடம் எனலாம்.

இந்தியாவின் மிக உயர்ந்த பதவியாகக் கருதப்படும் குடியரசுத் தலைவர் முதல், முற்றும் துறந்த ஆண்டி



வரை, காஞ்சி காமகோடி பீடாதிபதி என்றால் விழுந்து வணங்கி அவரிடம் ஆசி பெறுவதே வழமை.


காஞ்சிப் பீடாதிபதியிடம் ஆசி பெற்றால் அதுவே இந்த மனிதப் பிறவியின் பெரும் பேறு என்று நினைக்கின்ற எத்தனையோ பக்தர்கள் இந்தியாவில் இருக்கின்றனர்.

இத்தகையதோர் கௌரவத்திற்கும், வழிபாட்டிற்குமுரியவராக விளங்கிய காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஜெயேந்திர சுவாமிகள் இப்போது வேலூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

சங்கரராமன் என்பவரைக் கொலை செய்வதற்கு மூல காரணமாக இருந்தவர் ஜெயேந்திரர் என்ற குற்றச்சாட்டில் அவ் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ் கைது செய்யப்பட்டமையால் இந்துசமயத்திற்கு இழுக்கு வந்துவிடுமோ என்று அஞ்சுகின்ற இந்து மத விசுவாசிகளும் இருக்கவே செய்கின்றனர்.

அவர்களுடைய நினைப்பில் வெளிப்



படையான நியாயப்பாடேனும் இருப்பினும், இந்துசமயத்தின் தொன்மை, அதன் தத்துவம், அறக்கருத்துக்கள் என்பவற்றை ஆழமாக அறிந்து கொண்டோர் ஜெயேந்திரரின் கைதால் இந்து மதத்திற்கு எந்த இழுக்கும் ஏற்பட்டு விடாதென்ற முடிவுக்கு வருவர்.

சமயகுரவர்களுள் ஒருவரான திருநாவுக்கரசு சுவாமிகளை சமணசமயத்தவர்கள் கல்லில் கட்டிக் கடலில் போட்டார்கள். மெய்பொருள் நாயனாரை முத்தநாதன் என்ற கொடியவன் வாளால் வெட்டிக் கொன்றான்.

களின் அநாகரிகச் செயல் என்று கூறுமளவிற்கு முடிவுகள் அமையலாம்.

எதுவாயினும் காஞ்சிப்பீடத்தின் பீடாதிபதியாக இருந்த சுவாமிகளை இப்படிக் கைதுசெய்து காவலில் வைப்பது எவ்வகையில் நியாயமானது என்ற கேள்விகளோடு சம்பவத்தை ஜீரணிக்க முடியாமல் தத்தளிக்கின்ற இந்துசமயவாதிகள் கண்ணீர் விட்டுக்கொண்டே இருக்கிறார்கள்.


உலகிற்கு பேரொளியாகத் திகழ்ந்த ரமணரிஷி புற்றுநோய்க்கு ஆளாகி தனது பிறவியின் கர்மாவை அனுபவிக்கவில்லையா?

சுவாமி விவேகானந்தருக்கு இறையருளைப் புகட்டிய இராமகிருஷ்ண பரமஹம்சர் காசநோய்க்கு ஆளாகி ஊனுடம்பை வருத்திக்கொள்ளவில்லையா? இவையெல்லாம் சித்தர்கள் தமக்கு சிவன் கொடுத்த சோதனையாகவே கருதினர்.

இதேபோல் ஜெயேந்திரரின் கைதையும் எடுத்துக்கொள்ளலாம். காவி தரித்து ,கமண்டலம் ஏந்திய ஓர் துறவிக்கு வேலூர் சிறைச்சாலையும் ஒன்றுதான். காஞ்சி காமகோடி பீட

வைக்கப்பட்ட சான்றாதாரங்கள் நிஜமானவையா? அல்லது சோடிக்கப்பட்டவையா? என்பது விசாரணைகளின் முடிவில் கண்டறியப்படவேண்டிய உண்மைகள்.

ஆனால் ஜெயேந்திரரின் கைதில்



கலைஞர் கருணாநிதி. தேவையில்லாமல் மாட்டிக்கொண்டுவிட்டார். அதாவது, ஜெயேந்திரரைக் கைது செய்ததும் அதனை முதலில் வரவேற்றுப் பாராட்டிப் பேசியவர் கலைஞர் கருணா

ரின் கைது விடயத்தில் தமிழக அரசு பக்கச் சார்புடன் நடந்துள்ளதென்று குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது ஒருபுறம் நடக்க, மறுபுறத்தில் ஜெயேந்திரரின் கைதை எதிர்த்து உண்ணாவிரதம் இருப்பவர்கள் மத்தியில், முன்னாள் பிரதமர் வாஜ்பாய், முன்னாள் குடியரசுத் தலைவர் வெங்கட்ராமன் ஆகியோர் உரையாற்றியுள்ளனர்.

வாஜ்பாய் ,அத்வானி ,வெங்கட்ராமன் ஆகியோரின் வீறுகொண்ட எழுகை இந்தியாவில் பெரும் களேபரத்தை ஏற்படுத்தப்போவது உறுதி.

# தமிழக அரசியல்



மும் ஒன்று தான் என்று எடுத்துக் கொண்டால், ஜெயேந்திரரின் கைதுக்குள் இருக்கக்கூடிய தத்துவமே உணரப்படவேண்டிய விடயமாக இருக்கும்.

### தமிழகம் மாட்டிக் கொண்டது

சுவாமி ஜெயேந்திரரை தமிழகப் பொலிஸார் கைது செய்திருந்தாலும், அதற்குப் பின்னணியில் முதல்வர் ஜெயலலிதா இருக்கின்றார் என்பது தெளிவு. இதில் மாற்றுக்கருத்தேதுமில்லை.

ஆனால் ஜெயேந்திரர் மீது அளவு கடந்த அன்பு கொண்டிருந்த ஜெய

**விதுரன்**

லலிதா அவரைக் கைது செய்யுமளவிற்கு என்ன நடந்துவிட்டதென்பதே இப்போது தமிழகத்தில் புரியாத புதிராகவுள்ளது.

இதில் வேடிக்கை என்னவெனில், கலைஞர் கருணாநிதியைக் கைது செய்து அதன்மூலம் தனது பழியைத் தீர்த்துக்கொள்ள முற்பட்ட முதல்வர் ஜெயலலிதா அதே பாணியில் ஜெயேந்திரரையும் கைது செய்து தனது பழியைத் தீர்த்துள்ளார்.

ஓர் அரசியல்வாதி மீது கொண்ட வக்கிரமும், ஓர் ஆத்மீகவாதி மீது கொண்ட கோபமும் முதல்வர் ஜெயலலிதாவுக்கு சமமாக இருந்துள்ளதென்பது மட்டுமே இப்போது கண்டறியப்பட்டுள்ளது. போகப்போக மேலதிக விடயங்கள் வெளிவராமலா இருக்

நிதியே.

சங்கரராமனை ஜெந்திரர் கொலை செய்தாரா? இல்லையா? என்பதையெல்லாம் ஆராய்வதற்கு முன்னர் கலைஞர் கருணாநிதிக்கு ஜெயேந்திரர் ஓர் பிராமணராகவே காட்சி கொடுத்தார். திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைப்படி ஜெயேந்திரரின் கைதை வரவேற்கும் பொறுப்பை அவர் ஏற்றுக்கொண்டு அதன்படி தமிழகப் பொலிஸாரைப் பாராட்டிப் பேசினார்.

தமிழகத்தில் நடந்த ஓர் பரபரப்பான நிகழ்வில் அ.தி.மு.க. தலைவர் செல்வி ஜெயலலிதாவும், தி.மு.க. தலைவர் கலைஞர் கருணாநிதியும் ஆதரித்த ஒரே விடயம் ஜெயேந்திரரின் கைது என்றால் அது மிகையில்லை.

### வாஜ்பாய். அத்வானி களத்தில் குதிப்பு

ஜெயேந்திரரின் கைதை ஓர் சாதாரண விடயமாகவே கலைஞர் கருணாநிதியும், முதல்வர் ஜெயலலிதாவும் கருதினர். ஆனால் அந்தக் கைது விவகாரம் இன்று பாரதம் முழுவதிலுமே பெரும் பரபரப்பை ஏற்படுத்தி எந்நேரமும் இந்தியாவில் வன்முறைகள் வெடிக்கலாமெனும் அளவிற்கு நிலைமை படுமோசமாகிவிட்டது.


பாரதீய ஜனதாக் கட்சி உள்ளிட்ட இந்துமத அமைப்புகள் ஜெயேந்திரரின் கைதை எதிர்த்து ஊர்வலம், உண்ணாவிரதம் என்று நடத்தத் தொடங்கிவிட்டன.

இந்து அமைப்புகளின் போராட்டத்தை மேலும் தீவிரப்படுத்தும் வகையில், முன்னாள் இந்தியத் துணைப் பிரதமர் எல்.கே. அத்வானி வேலூர் சிறைக்குச் சென்று ஜெயேந்திரரைச் சந்தித்து சுமார் 25 நிமிடங்கள் வரை உரையாடியுள்ளார்.

சிறைச்சாலையில் ஜெயேந்திரரைச் சந்தித்துவிட்டு ஊடகவியலாளர்களிடம் உரையாற்றிய எல்.கே. அத்வானி, ஜெயேந்திரரைக் கைது செய்வதில் தமிழகப் பொலிஸார் முறை தவறி நடந்துவிட்டனர். அவ

### தொப்பியை பிரட்டினார் கலைஞர் கருணாநிதி

ஜெயேந்திரரின் கைதை கைதட்டி வரவேற்ற கலைஞர் கருணாநிதி, சுவாமிகளுக்கு இருக்கக்கூடிய ஆதர



வைக் கண்டு அதிர்ந்து போனார். இப்போதுதான் தமிழக மக்கள் தன் மீது கருணை காட்டத் தொடங்கியுள்ளனர். இதற்கு இந்திய நாடாளுமன்றத் தேர்தல் நல்லதோர் சான்று.

தமிழகத்தின் அடுத்த தேர்தலில், கருணாநிதி தான் முதல்வர் என்று அடித்துக் கூறுமளவிற்கு தி.மு.க.வின் செல்வாக்கு மிதமாக இருக்கும் போது, அறுந்த வாயை பேசாமல் வைத்திருக்கக்கூடாதா? என்று கட்சித் தொண்டர்கள் கலைஞரைப் பார்த்து முணுமுணுக்கத் தொடங்கிவிட்டனர்.

கட்சிக் கூட்டத்தில் யார் என்ன கதைக்கிறார்கள் என்பதை, தான் அவதானிப்பது யாருக்குமே தெரியக் கூடாதென்பதற்காகக் கறுத்தக் கண்ணாடி அணியும் கலைஞர் கருணாநிதிக்கு தொண்டர்களின் முணுமுணுப்பு புரியாமலா இருக்கும்.

நிலைமையைப் புரிந்துகொண்ட அவர் தொப்பியை அப்படியே பிரட்டிவிட்டார்.

(மிகுதி நாளை தொடரும்)

மிகல்மேவல் மெய்ப்பொருள் காணார் இகல்மேவல்
இன்னா அறிவி னவர் - குறள்

வலம்புரி

# சட்டங்களை அமுல்படுத்த அரச அமைப்புகள் துணியவேண்டும்

சட்டம் என்பது மக்களை ஒழுங்குபடுத்தும் கருவி. அதனை சரியான முறையில் அமுல் படுத்து கின்றபோது நாட்டில் கொலை, கொள்ளை, களவு போன்ற தீய செயல்களுக்கு இடமில்லாமல் போகும்.

எனினும், சட்டங்களை அமுல்படுத்த வேண்டியவர்கள் பாராமுகமாக இருந்தால் நிலமை படுமோசமாகவே இருக்கும். இது விடயத்தில் உள்ளூராட்சி மன்றங்கள் முதல் உயர்நீதிமன்றங்கள் வரை தமது கடமைகளைச் செய்வதில் அதி தீவிரம் காட்ட வேண்டும்.

அவ் வகையில், யாழ்ப்பாணக் குடாநாட்டில் இயங்கும் உள்ளூராட்சி மன்றங்கள் தமது கடமைகளை - தத்தம் பிரதேசத்தில் அமுலாக்கப்படவேண்டிய அடிப்படைச் சட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் பின்னிற்பதைக் காணமுடிகின்றது.

குறிப்பாக, யாழ். குடாநாட்டில் வீதிகளில் திரிகின்ற கட்டாக் காலி ஆடு, மாடு மற்றும் நாய்களின் நடமாட்டம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. இதனால் ஏற்படும் விபத்துக்கள் மனித உயிர்களைக் காவுகொள்கின்றன.

கால்நடைகளை வளர்ப்பது தவறன்று. ஆனால், அவற்றை கட்டி வளர்க்க வேண்டுமென்பது உள்ளூராட்சி மன்றங்கள் கூறும் சட்டமாகும். அவ்வாறாயின் யாழ். குடாநாட்டில் கட்டாக்காலிகளின் தொல்லை அதிகரித்து வருவதற்கான காரணம்தான் என்ன?

உள்ளூராட்சி சபைகள் இயங்குகின்றன. அவை அறவிடப்படவேண்டிய வரிகளை அறவிடுகின்றன. அங்கு கடமையாற்றுகின்ற ஊழியர்கள் சம்பளம் பெறுகின்றனர். இவ்வாறு உள்ளூராட்சி சபைகள் தங்கு தடையின்றி இயங்கும் போது கட்டாக்காலிகளைக் கட்டுப்படுத்துவதில் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லையாயின், எங்கோ, ஏதோ தவறு நடைபெறுகின்றது என்பது புலனாகின்றது அல்லவா?

கால்நடைகளைக் கட்டி வளர்க்க வேண்டும் என்ற சட்டம் பொதுமக்களின் காதுகளில் உரத்து கூறப்படுவதும், அதனை அவர்கள் நடைமுறைப்படுத்தத் தவறும் பட்சத்தில் கிடைக்கக்கூடிய தண்டனைகளை தெளிவுபடுத்துவதும் உள்ளூராட்சி மன்றங்களின் தலையாய கடமையாகும்.

இதனை முதலில் செய்யும்போது சட்டத்தை மதிக்கின்ற மக்கள் அதற்கு கட்டுப்படுவர். அதன் பின்னர் இருக்கக்கூடிய தவறுகளுக்கு தண்டனைகளே வழியாகும்.

தண்டனைகளை விதிக்கும்போது இருக்கக்கூடிய மிகப்பெரிய விடயம் பக்கச் சார்பற்ற தீர்ப்பாகும். அதாவது செல்வாக்கு என்பதற்கு எவ்விடத்திலும் இடமில்லாது போகின்ற போது சட்டத்தை அமுல்படுத்துவதும், அதனை பின்பற்றச் செய்வதும் சுலபமாகிவிடும்.

யுத்தத்தால் பாதிப்படைந்த யாழ். குடாநாடு யுத்தத்தால் மட்டும் அழிந்து போகவில்லை. மாறாக சட்டங்கள், சம்பிரதாயங்கள் என்பவற்றை மதிக்கும் மனநிலையும் மாறி இன்று மிகப்பெரும் சீரழிவை நாம் சந்தித்து வருகின்றோம்.

சட்டங்களை மதிப்பதில் தவறுகள் ஏற்படுகின்ற போதே குழப்பங்களும், ஆபத்துக்களும் நடக்கின்றன. மதில் கட்டுவது முதல் கால் நடைகள் வளர்ப்பது வரை இருக்கக்கூடிய சட்டங்களை, அது தொடர்பில் பெற்றுக்கொள்ள வேண்டிய ஆவணங்களை பொதுமக்களுக்கு தெரியப்படுத்துவதன் மூலம் நீதிமன்றங்களில் குவிகின்ற வழக்குகளை யும் பொதுமக்கள் செய்கின்ற செலவுகளையும் குறைத்துக்கொள்ள முடியும்.

# இலங்கையில் மரணதண்டனை இதுவரை அமுல்படுத்தப்படாமைக்கு அரசியலே காரணம்

## ஓய்வுபெற்ற நீதியரசர் விக்னேஸ்வரன் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் தற்போது நிலவும் ஆபத்தான நிலைமையில் சிறிது காலத்திற்காவது மரணதண்டனை அமுல்படுத்தப்பட வேண்டும் என ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதி சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மேலநீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டிய கொலை செய்யப்பட்டதையடுத்தே மரண தண்டனையை அமுல்படுத்துவதென்று ஜனாதிபதி தீர்மானித்துள்ளமை குறித்து ஊடகமொன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

மரண தண்டனையை இலங்கையில் மீண்டும் அமுல்படுத்தாமைக்கு முக்கிய காரணம் அரசியல் தான்.

அரசியல்வாதிகள் தாம் அரசியல் செல்வாக்கைப் பெறுவதற்காக தம்மோடு சேர்ந்த குற்றவாளிகளைக் குறிப்பாக குற்றச்செயல்களில் ஈடுபட்டு நீதிமன்றினால் மரண தண்டனை விதிக்கப்பட்டவர்களை அதிலிருந்து காப்பாற்றுவதற்காக இந்த மரண தண்டனையை அமுல்படுத்தத் தயங்கினார்கள் என்றே நான் நினைக்கின்றேன்.

எனது இந்தக் கருத்து முரணானது என்று கூட அந்த அரசியல்வாதிகள் எடுத்துக்கொள்ளலாம்.

ஆனால் இன்று இதனால் ஏற்பட்ட விளைவுகளை அரசியல் வாதிகள் மட்டுமல்ல ஜனாதிபதி கூட உணர்ந்துவிட்டார்.

இதனால் தான் மரணதண்டனையை அமுல்படுத்த ஜனாதிபதி தீர்மானித்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார். இதேவேளை, இலங்கையில் மீண்டும் மரண தண்டனையை அமுல்படுத்தாவிட்டால் கொலையும்,கொள்ளையும்,பாலியல் வல்லுறவும் நிறைந்து நாட்டையே சீரழித்துவிடும் என அரசியல் அவதானிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

யுத்தத்தினால் அழிந்து போன இலங்கையை புத்துயிரூட்டி அபிவிருத்திசெய்ய முன்னர் இந்தக் குற்றச்செயல்களைத் தடுத்து நிறுத்த வேண்டும். அவ்வாறு குற்றச்செயல்களைத் தடுத்து நிறுத்துவதற்கு சரியான வழி மரணதண்டனையை அமுல்படுத்துவதே என்றும் அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றார்கள். இலங்கையில் நாள் ஒன்றுக்கு ஆகக் குறைந்தது 10 குற்றச்செயல்களாவது இடம்பெறுகின்றதாகவும் அவர்கள் கூறுகின்றார்கள்.

குற்றவாளிகளுக்கு சரியான தீர்ப்பை வழங்கி நீதியை நிலைநாட்டுபவர்கள் கூட இன்று படுகொலை செய்யப்படுகிறார்கள் என்றால் நாட்டில் நீதியும் சட்டமும் மிக மோசமான நிலையில் உள்ளது. இந்த நிலையில் நாட்டில் நீதியையும் சட்டத்தையும நிலைநாட்டி அமைதியை ஏற்படுத்த வேண்டுமானால் மீண்டும் மரண தண்டனையை அமுல்படுத்த வேண்டும் என்றும் அரசியல் அவதானிகள் கோருகின்றனர். (க)

# அரச ஊடகங்கள் திட்டமிட்டே புலிகளுக்கு எதிராக பொய்ப்பிரசாரம் செய்கின்றன

## மட்டு.அம்பாறை அரசியல்துறைப் பொறுப்பாளர் குற்றச்சாட்டு

(மட்டக்களப்பு)

வடக்கு -கிழக்கில் விடுதலைப் புலிகளுக்கு இழுக்கு ஏற்படுத்தும் வகையில் அரச ஊடகங்களும் சில தனியார் ஊடகங்களும் திட்டமிட்டு பொய்ப்பிரசாரம் செய்து வருவதாக தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம் பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் குற்றஞ் சுமத்தியுள்ளார்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிற்குட்பட்ட தராவிக்குளம் பிரதேசத்தில் இடம்பெற்ற கிளைமோர் தாக்குதலில் 20 விடுதலைப் புலிப் போராளிகள் பலியானதாகக் குறிப்பிட்ட சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

இந்த செய்தி தொடர்பாக செய்தியாளர்களுக்கு நேற்று முன்தினம் விளக்கமளித்த அவர், இப்படியான சம்பவமொன்று நடைபெறவில்லை என முற்றாக மறுத்தார்.

இத்தகைய பிரசாரங்கள் திட்டமிட்ட நடவடிக்கைகளாகும். அத்துடன, மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் மாவீரர் தினம் சிறப்பாக நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதனால் இதனை குழப்புவதற்காக மக்கள் மத்தியில் பொய் வதந்திகளை ஒரு சாரார் பரப்பி வருகின்றார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (க)



தேசிய கல்வி நிறுவகமும் ,யாழ். கல்வி வலயமும் இணைந்து பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொருட்டு நேற்று நடாத்திய நிகழ்வில் யாழ்.மத்திய பேருந்து நிலையத்தில் பாடசாலை மாணவர்கள் சுலோக அட்டைகளைத் தாங்கிய வண்ணம் நிற்பதைப் படங்களில் காணலாம். (படங்கள்: சிவசங்கர்)

# மாவீரர் தினத்தன்று படகு, மோட்டார் படையணி கண்காட்சி

(மட்டக்களப்பு)

மாவரர் தினத்தை உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்க வாகரைப் பிரதேசம் தயாராகி வருகிறது. அதற்கமைய வாகரையில் எதிர்வரும் 27ஆம் திகதியன்று கடற்புலிகளின் படகுக் கண்காட்சி, மோட்டார் படையணி கண்காட்சி என்பன இடம் பெறுவதுடன், வாகரைக் கடற்கரையில் தீபச்சுடர்களை வைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக மட்டு. அம்பாறை கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் பாண்டியன் தெரிவித்தார். (க)

# நீதிபதியைக் கொல்லுமளவிற்கு நீதித்துறை சீர்குலைந்துள்ளது

## பிரதம நீதியரசர் தெரிவிப்பு

(கொழும்பு)

அதி உயர் அதிகாரம் கொண்ட நீதிபதியொருவர் படுகொலை செய்யப்பட்டமை நாட்டில் நீதித்துறை பெருமளவு சீர்குலைந்து விட்டதன் வெளிப்பாடு என பிரதம நீதியரசர் சரத் என்.டி.சில்வா கருத்து வெளியிட்டுள்ளார்.

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிடிய படுகொலை தொடர்பாகக் கருத்து வெளியிட்ட அவர்,

இந்தக் கொலை தனிப்பட்ட ஒரு நபருக்கு ஏற்பட்ட பாதிப்பு அல்ல, அனைத்து நீதித்துறையும் எதிர்நோக்கி வருகின்ற சவால்களின் வெளிப்பாடாகும் என சுட்டிக்காட்டினார். இந்நிலையில் சட்டத்தை நிலைநாட்ட சகல பிரிவினரும் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் பற்றியும் வலியுறுத்தியுள்ளார்.

பல காலமாக இடம்பெற்று வரும் தொடர் குற்றச் சம்பவங்களின் விளைவே நீதிபதியின் கொலையாகும். இந்தக் குற்றச் செயல்களைப் பொலிஸார் விசாரிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். (க)

# மட்டு நகர் தேடுதல் குறித்து அரியம் எம்.பி கண்டனம்

(மட்டக்களப்பு)

மடடக்களப்பு நகரில் ஸ்ரீலங்கா படையினர் மற்றும் பொலிஸார் பொது மக்களின் வீடுகளில் தேடுதல் நடத்தியிருப்பது குறித்து மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

போர் நிறுத்தம் அமுலிலுள்ள இக்கால கட்டத்தில் படையினர் இவ்வாறு நடந்து கொள்வது போர் நிறுத்த உடன்படிக்கையை மீறும் செயல் எனத் தெரிவித்திருக்கும் அரியம் எம்.பா. ,இவ்வாறு படைத்தரப்பு மேற்கொள்ளும் நடவடிக்கைகளால் மக்கள் பீதியும் அச்சமும் அடைந்துள்ளனர். இது இயல்பு நிலையை பாதிக்கச் செய்யும்.

எனவே படைத்தரப்பு இவ்வாறு நடந்து கொள்ளாது தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரிகள் மேற்கொள்ள வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார். (ற)

# தினசரி தியானம்

## விவேகச் சிந்தனைகள்

பரிபூரணச் சுதந்திர நிலையை அடைவதற்கு இந்த உலகம் உதவினால் நல்லது. இல்லையானால் இதுவரையுள்ள ஆயிரக்கணக்கான தளைகளோடு அதுவும் ஒரு தளையாகுமானால் அது தீமையே. உடைமைகள், கல்வி, அழகு என்று எல்லாமே அந்த லட்சியத்தை அடைய உதவுகின்ற வகையில் பயனுள்ளவை. செயல் முறைக்கு உகந்தவை. சுதந்திர இலக்கை அடைய உதவாமல் போகும் போது அவை நிச்சயம் ஆபத்தாகவே முடியும்.

சுவாமி விவேகானந்தர்

## நீதிபதி, பொலிஸ் இன்ஸ்பெக்டரை

# கொலைசெய்தவர்கள் பற்றிய தகவல்களை வழங்குவோருக்கு 10 லட்சம் ரூபா சன்மானம்!

(கொழும்பு)

மேல்நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேபிட்டிய மற்றும் பொலிஸ் இன்ஸ்பெக்டர் உபாலி ரணசிங்க ஆகியோரைப் படுகொலை செய்தவர்கள் பற்றி தகவல்களை வழங்குவோருக்கு 10 லட்சம் ரூபா சன்மானம் வழங்கப்படுமென பொலிஸ் திணைக்களம் அறிவித்துள்ளது.

இவர்கள் இருவரும் கடந்த வெள்ளிக்கிழமை படுகொலை செய்யப்பட்டார்கள். கொலைசெய்தவர்கள் பற்றிய தகவல்களை வழங்குவோரின் பெயர் விபரங்கள் இரகசியம் பேணப்படும் எனவும் பொலிஸ் திணைக்களம் உறுதியளித்துள்ளது. (க-60)

## ஆசிரியர் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட கல்வித் திணைக்கள ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் விபரங்களைச் சேகரிப்பதற்கான கலந்துரையாடல் ஒன்று இன்று பிற்பகல் 3 மணிக்கு வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இலங்கை ஆசிரியர் சங்க யாழ்.மாவட்டக் கிளைத்தலைவர் சா.தியாகலிங்கம் தலைமையில் இக்கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்கள், உயர் பாதுகாப்பு வலயங்களைச் சேர்ந்தவர்கள் இக்கலந்துரையாடலில் பங்குகொண்டு தமது விபரங்களைச் சமர்ப்பிக்கலாமென ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை எதிர்வரும் 29 ஆம், 30 ஆம் திகதிகளில் முறையே சாவகச்சேரி இந்துக் கல்லூரி, கரவெட்டி திரு இருதயக் கல்லூரிகளில் இக்கலந்துரையாடல் நடைபெறவுள்ளது. (ச)

## இராணுவ...

விக்கின்றனர்.

இத் தாக்குதல் சம்பவத்தினையடுத்து பெருமளவு பொலிஸாரும், இராணுவத்தினரும் கூட்டாக தேடுதல் மேற்கொண்டனர்.

இதன்போது சந்தேகத்தின்பேரில் இரண்டு தமிழ் இளைஞர்கள் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்ட இருவரும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களிடமிருந்து ஆயுதம் எதுவும் மீட்கப்படவில்லை என பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்தார். (ச-04)

# தலைவர் பிரபாவின்...

தெளிவான நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் முடிவுரையாகவும் மாவீரர்நாள் உரை அமைவதால் எதிர்வரும் மாவீரர் நாள் உரையில் தலைவர் பிரபாகரன் சமாதான முயற்சிக்கும், இனப்பிரச்சினைத் தீர்வுக்கும், தமிழ் மக்களின் உரிமைக்கும் அதிக முக்கியத்துவம் கொடுத்து சமாதானத்தை விரைவுபடுத்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் அரசாங்கத்துக்கு காலக்கெடு விதித்து உரையாற்றுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அரசாங்கம் சமாதான முயற்சிகளை துரிதப்படுத்தாமல் தமது அரசியல் இருப்பையும், பதவியையும் தக்கவைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டு சர்வதேசத்துக்கு சமாதான முயற்சியில் தாம் அக்கறைகாட்டுவதாக ஒப்பாசாரம் காட்டுவதுடன், விடுதலைப் புலிகளே சமாதானத்துக்கு முட்டுக்கட்டை போடுவதாகவும் பொய்யான தகவல்களால் சர்வதேச சமூகத்தை திசைமாற்றி வருகின்றனர்.

இதனை முறியடிக்கும் வகையில சமாதானத்தில் விடுதலைப்புலிகளுக்கு இருக்கின்ற அக்கறையையும், ஆர்வத்தையும் தலைவர் பிரபாகரன் தனது உரையில் வெளிப்படுத்துவார் என்றும் அதேநேரம் சமாதானத்தை இழுத்தடித்து காலம் தாழ்த்தும் அரசாங்கத்தின் பொய்யான முகத்திரையை கிழிக்கும் வகையில் அரசுக்கு காலக்கெடு ஒன்றை விதித்து அவர் உரையாற்றுவார் என்றும் அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை அவரின் உரையில் தமிழ் மக்களின் இயல்பு வாழ்க்கையின் முக்கியத்துவம், அரசபடைகளின் சாமாதான விரோதச் செயற்பாடுகள், வடக்கு கிழக்கு மாகாணத்துக்கு இடைக்கால நிர்வாகசபையின் அவசியம் மற்றும் இலங்கை இந்திய பாதுகாப்பு உடன்படிக்கையின் விளைவு, நோக்கம் குறித்து கருத்து வெளியிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (இ-20)

## தமிழ் இளைஞர்கள்...

கைதுசெய்யப்பட்ட நான்கு இளைஞர்களையும் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் விசாரணை செய்துவருவதாக தெரியவருகிறது. இவர்கள் சிலாபம், புத்தளம், திருகோணமலை மற்றும் மட்டக்களப்பைச் சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கொழும்புத் துறைமுகத்தை அண்டிய பிரதேசத்தில் சந்தேகத்திற்குரிய முறையில் நடமாடினார் எனத் தெரிவித்து நேற்று மூன்தினம் மாலை மல்லாகத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் குதிரைப் படை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். பி.மோகனவர்த்தனன் (வயது 22) என்பவரே கைதுசெய்யப்பட்டவராவார். இவர் தற்போது பொலிஸாரால் விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

கடந்த 22 ஆம் திகதி பிரதமரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமான அலரிமாளிகையில் வீடியோப் படம் எடுக்க முற்பட்டதாக குற்றம் சுமத்தி கொழும்பு மருதானையைச் சேர்ந்த கே.விமலதேவன் என்ற இளைஞனை கொள்ளுப்பிட்டிப் பொலிஸார் கைதுசெய்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.(ச-04)

## ஜனாதிபதி...

உறவுகள் குறித்தும் பொதுவான பிரச்சினை குறித்தும் மசகு எண்ணை ஒப்பந்தம் குறித்தும் ஆராயப்படவுள்ளதாக ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# எயிட்ஸினால் பாதிக்கப்பட்டவர்க்ளில் அதிகமானோர் இளம்பெண்களாம்!

(நியூயோர்க்)

எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்படுபவர்களில் அதிகமானோர் உலகில் இளம் பெண்களெனத் தெரிவிக்கப்படுகின்றது.

உலக சுகாதார அமைப்பு, யு.என். எயிட்ஸ் ஆகிய அமைப்புக்கள் நேற்று வெளியிட்டுள்ள ஆண்டறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

உலகில் எச்.ஐ.வி கிருமி தாக்கியோரில் அரைவாசிப்பேர் பெண்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எயிட்ஸ் நோய் தாக்கியிருக்கும் ஆபிரிக்க நாடுகளில் எச்.ஐ.வி. தாக்கியோரில் முக்கால்வாசிப் பேர் பெண்கள் எனக் கூறப்படுகிறது.பெண்களின் சமூக பொருளாதார நிலை முன்னேறவில்லை என்பதால் அவர்கள் அதிமாகப் பாதிக்கப்படும் வாய்ப்புள்ளதென அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.(ச)

## அரச மரத்தில்...

யுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மரத்தில் தும்பிக்கையுடனான அவ் உருவ அமைப்பு விநாயகரின் நிஜ உருவம்போல் காட்சியளிக்கின்றது. அவ்உருவத்தை மக்கள் வணங்கிவருகின்றனர். அத்துடன் பூஜை வழிபாடுகளும் நடைபெறுகின்றன. (ச)

## ஒலிப்பேழை வெளியீடு



மாலதி படையணியின் உருவாக்கத்தில் இசைவாணர் கண்ணனின் இசையமைப்பில் உருவான "வரலாறு தந்த வல்லமை" ஒலிப்பேழை வெளியீட்டு விழா நாளை கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ச)

## சிறப்பாக நடைபெற்ற சாயிபாபா தினம்

(யாழ்ப்பாணம்)

பகவான் ஸ்ரீ சத்ய சாயிபாபாபவின் 79 ஆவது பிறந்ததினம் நேற்று யாழ். குடாநாட்டின் பல்வேறு இடங்களிலும் கொண்டாடப்பட்டது.

யாழ்ப்பாணம், பருத்தித்துறை, சங்கானை, சாவகச்சேரி மற்றும் தீவகம் ஆகிய இடங்களில் பக்திமயமாக இத்தினம் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வுகளில் பஜனை வழிபாடு மற்றும் சொற்பொழிவுகள் ஆகியன இடம்பெற்றன.

இதேவேளை, திருநெல்வேலியிலுள்ள சத்யசாயி சேவா நிலையத்தில் இடம்பெற்ற பாபாவின் பிறந்ததின நிகழ்வில் பேராசிரியர் சபா ஜெயராசா கலந்துகொண்டு உரையாற்றினார். அத்துடன், மேற்படி நிலையத்தால் நடத்தப்பட்ட தையல்பயிற்சியில் பங்குபற்றி சித்தியடைந்த 30 பெண்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (ற-16)

## கண்காட்சி

ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலையில் இன்று முற்பகல் 10 மணிக்கு ஏழாலை குடும்பபாடசாலை மாணவர்களின் சித்திரக் கண்காட்சி நடைபெறும்.

அத்துடன் சன்மார்க்க நூலகக் கண்காட்சியும் நடைபெறும். (க)


# சாவகச்சேரி நகரசபை

## 01.01.2005 முதல் 31.12.2005 வரை குத்தகைகள், சேவைக்கான

# கேள்வி அறிவித்தல்

1. கேள்விப்பத்திரம் வழங்கும் கடைசித் திகதி : 07.12.2004
2. கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி : 09.12.2004 காலை 10.00 மணி
3. கேள்வி திறக்கப்படும் திகதி : 09.12.2004 காலை 11.00 மணி

| இல | குத்தகை விபரம் | ஆகக்குறைந்த கேள்வித்தொகை | கேள்விப்பணம் மீளளிக்கக் கூடியது | கேள்விப்படிவக் கட்டணம் மீளளிக்கமுடியாதது |
|---|---|---|---|---|
| 01 | சாவகச்சேரி பொதுச் சந்தைக் குத்தகை | 11,00,000.00 | 5,000.00 | 200.00 |
| 02 | சாவகச்சேரி மீன் சந்தைக் குத்தகை | 176,000.00 | 1,000.00 | 200.00 |
| 03 | ஆட்டிறைச்சிக்கடை NMS I | 120,000.00 | 1,000.00 | 200.00 |
| 04 | ஆட்டிறைச்சிக்கடை NMS II | 120,000.00 | 1,000.00 | 200.00 |
| 05 | மாட்டிறைச்சிக்கடை NMS III | 180,000.00 | 1,000.00 | 200.00 |
| 06 | மாட்டிறைச்சிக்கடை NMS IV | 180,000.00 | 1,000.00 | 200.00 |
| 07 | துவிச்சக்கரவண்டித் தரிப்பிடக் குத்தகை | 50,000.00 | 1,000.00 | 200.00 |
| 08 | காலைக் குத்தகை | 20,000.00 | 1,000.00 | 200.00 |
| 09 | குப்பை கூழங்கள் அகற்றுவதற்காக உழவு இயந்திரத்தைப் பெட்டியுடன் வாடகைக்கு விடுதல் (நாளொன்றுக்கு) | - | 1,000.00 | 200.00 |

**குறிப்பு:**

- ⇨ இறைச்சிக் கடைகளுக்கான சபையால் விதிக்கப்படும் மாத வாடகைகளை செலுத்தவேண்டும்.
- ⇨ கேள்விப் படிவக் கட்ஒணடணம், கேள்வித்தொகை, மாதவாடகை என்பவற்றிற்கு 15% பெறுமதிசேர்வரி மேலதிகமாகச் செலுத்தப்படவேண்டும்.
- ⇨ கேள்விப் படிவங்கள் கோருபவர்கள் விண்ணப்பங்களுடன் அடையாள அட்டை கொண்டுவரவேண்டும்.
- ⇨ மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
- ⇨ போதிய காரணங்களால் கேள்விகளை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் செயலாளருக்கு உண்டு.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி
23.11.2004

திருமதி கு.ஆறுமுகம்
செயலாளர்
நகரசபை, சாவகச்சேரி

(C/743)










இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.11.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.